ஸ்ரீ சத்குரு திருவடி துணை!


ஜகத்ஜீவ ஈஸ்வராதிகள் தோற்றமும் நான்கு மஹாவாக்கிய ஞானமும்

விளக்கம் அருள்பவர்

ஸ்ரீ சத்குரு தூளி ஸ்வாமிகள்

அன்பின் குடில்
253/1, மேட்டூர் பவானி மெயின் ரோடு, கோம்பூர்,
நெரிஞ்சிப்பேட்டை, பவானி (தாலுகா),
ஈரோடு (மாவட்டம்).
தொலைபேசி : 04256-77655

வெளியீடு :
திருவடிக் குழந்தைகள்
சென்னை



ஸ்ரீ சத்குரு திருவடி துணை!

ஜகத்ஜீவ ஈஸ்வராதிகள் தோற்றமும் நான்கு மஹாவாக்கிய ஞானமும்

விளக்கம் அருள்பவர்

ஸ்ரீ சத்குரு தூனி ஸ்வாமிகள்

இரண்டாம் பதிப்பு :
ஜனவரி 2002

பிரதிகள் : 1000

Printed by :
Pearl Offset Printers
89, Rangarajapuram Road,
Kodambakkam,
Chennai - 600 024.
Phone: 4833090, Fax: 4814663

ஜகத்ஜீவ ஈஸ்வராதிகள் தோற்றம்

ஸ்ரீ சத்குரு திருவடி துணை!

அன்பின் குழந்தைகளே!

ஜென்ம ஜென்மாந்திரமாக உங்களை உண்மையென நம்ப வைத்துக் கொண்டு இருக்கும் இந்த ஜகத்தையும், ஜகத்தின் பொருள்களையும், ஜகத்தின் உறவுகளையும் உண்மையாக விட்டாலன்றி உண்மை உணர்வு உங்களுக்கு சாத்தியமாகாது. மேலே சொன்ன அவைகளையும், உயிரற்ற ஜடப்பொருள்களையும், அவைகளை உயிராகவும், உடமையாகவும் உங்கள் மனமடமையினால் **'நான், எனது'** என்று புசித்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

உங்கள் கணவனாகவும், மனைவியாகவும், குழந்தைகளாகவும், அனுபவ வஸ்துக்களாகவும் தோற்றுகின்ற அனைத்தும் புண்ணிய பாப கணக்குகளுக்கு சம்பந்தப்பட்டவை. அந்த புண்ணிய பாபம் உங்களுக்கு இல்லை.

உங்கள் தாய் தந்தையரோ, கணவன் மனைவி குழந்தைகளோ, உறவு சுற்றங்களோ உலகின் நிலையில் நீங்கள் பட்ட கடனை அடைப்பார்கள். அவரவர் சேமிக்கும் சத்தியமும், தர்மமும் அவரவர்க்கே தவிர மற்ற ஒருவருக்கு கொடுக்க முடியாது. உங்கள் பந்துக்களும், உறவுகளும் மேலும் மேலும் பிறவிகளை தரமுடியுமே தவிர, பிறவியை அறுக்க முடியாது. பிறவி அறுபட வேண்டுமானால் திருவருளும், குருவருளும் இணைந்தாலன்றி சாத்தியமாகாது.

திருவருள் வினைகளை நீக்கும். குருவருள் அறியாமையை போக்கும். வினையும் அறியாமையும் அகன்றால் அன்றி

ஜென்மா தொலையாது. இந்த ஜென்மாவில் விட்டுவிட்டால் அடுத்து எந்த ஜென்மா கிடைக்குமோ தெரியாது. நீங்கள் தேடும் பொன்னும், பொருளும், உறவும், சுற்றமும் உங்கள் தூலத்தை விடும்போது கூட வருவதில்லை.

''காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே'' என்ற முதுரையின்படி பிரயோஜனப்படாத பொருளும் கூட உங்களுடன் வராது. ஏன் நீங்கள் கட்டி இருக்கும் கௌபீனமும் கூட வருவதில்லை. இப்படி அநித்தியத்தை நித்யமாக பார்க்கும் உங்களின் நிலை மிகவும் பரிதாபமானதே!

குழந்தைகளே!

ஞான சூரியன் உதித்திருக்கிறான். விழித்து எழுங்கள். நாளை என்றோ, பிறகு என்றோ ஒத்திப்போட வேண்டாம். அறியாமையில் உறங்கியது போதும். ஜாக்ரதை, ஜாக்ரதை, ஜாக்ரதை என்று சொல்லும் **ஜாக்ரதாவஸ்தையில்** (விழிப்பு நிலையில்) **சுழுப்தி** (ஆழ்ந்த உறக்கம்) நிலைக்கு வாருங்கள்.

பேசுதலும் பிதற்றுதலும் இங்கே, ஆசையும் நேசமும் அங்கே என திருவருளையும், குருவருளையும் நம்பி வைராக்கியத்துடன் உலகத்தை தள்ளி உய்வடையுங்கள் என ஆசி கூறி கீழே சில ஞான வாசகங்களை தருகிறோம்.

அதை படித்து சுயமாக அனுபவம் பெற்று கடைத்தேறுவீர்களாக!

ஜகத்ஜீவ ஈஸ்வராதிகள் தோற்றம்

பிரம்மம் :

அகண்ட பரிபூரண ஆனந்தமாயும், சத்சித் ஆனந்தமாயும், நிய, நித்ய, நிர்மல, ஸ்வயம், பிரகாசமாகிய ஒப்பற்ற வஸ்துவானது, நாம ரூப குணம் குறிகள் ரஹிதமாக இருக்கின்றபடியாலும், மனம் வாக்குக்கு எட்டாத, தேவர் மூவராலும் விரித்துரைக்க முடியாத, அப்படிப்பட்ட மஹத்தை இப்படி என்று சொன்னால் அது பிரமையை உண்டாக்கும். ஆதலால் நிவாத தீபம் (சித்திர தீபம்) போலும், நிஷ்தரங்க (அலையற்ற) சமுத்திரம் போலும் அசைவற்று இருக்கும் அந்த நிர்குண வஸ்துவை, **''பிரம்மம்''** என்று வாக்கியார்த்தமாக சத்துக்கள் சொல்வார்கள்.

ஈஸ்வரன் :

அகண்ட பேரொளியின் (வெட்டவெளியின்) அதாவது அந்த பிரம்மத்தின் அணுப்பிரமாணமான ஓர் தீபமே **''ஈஸ்வரன்''** என்று சத்துக்கள் சொல்வார்கள். ஈஸ்வரன் என்றால் அனைத்து ஜீவகோடிகளையும் பேதமில்லாமல் தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்கிறவன் என்று பொருள்.

மாயை :

தீபத்தின் நிழல் போலவும், அக்னியின் சூடு போலவும், சர்ப்பத்தில் விஷம் போலவும் பிரிக்க முடியாத சலனமே (அசைவே) சுபாவமான மூலபிரகிருதி (அவ்யக்தம்) என்னும் பெயருடைய இருள் வடிவமான ஒரு மாயா சக்தி

ஈஸ்வரனிடமிருந்து உண்டாயிற்று. சுந்தர சூரியர் உற்பத்தி ஆகாமுன்னம் எங்கும் அந்த அந்தகாரமே (இருளே) நிறைந்திருந்தது. அந்த அந்தகாரத்தை **''மாயை''** என்று சத்துக்கள் சொல்வார்கள்.

ஜகம் :

அணுவுக்கும் அணுவான மாயை என்னும் இருட்டு எப்போது உண்டாயிற்றோ அப்போதே ''ஒன்று உண்டானால் அதில் அநேகம் உண்டு'' என்ற பிரமாணப்படி முழுவதும் மித்தையான (பொய்யான) மாயையில் பிரதிபலித்த பிரம்மத்தை **''ஜகம்''** என்று சத்துக்கள் சொல்வார்கள்.

ஜீவன் :

சமுத்திரத்தில் துளி போலவும், அக்னியில் பொறி போலவும், அந்த அகண்டாகாரத்தில் தோன்றிய தீபத்தின் பிரதிபலிப்பே, ஜீவன் (ஆத்மா) ஆகும். மாயா உலகையும், உலக வஸ்துக்களையும் **''நான், எனது''** என்று புசிப்பதனால் (ஈசன் புசிப்பதில்லை, பார்த்துக் கொண்டு இருகிறான்) **''ஜீவன்''** என்ற பெயர் உண்டாயிற்று என்று சத்துக்கள் சொல்வார்கள். ஜீவன் என்று இந்த புசிப்பை விடுகிறானோ அன்று ஆத்மா ஆகிறான். ஆத்மாவே ஈசன் ஆகும். ஈசனே பரபிரம்மமாகும்.

பிரம்மானந்த சமுத்திரத்தில் ஒரு குவளையில் எடுத்து வைக்கப்பட்ட ஜலம் ஜீவன். ஓர் குடத்தில் எடுத்து வைக்கப்பட்ட ஜலம் ஈசன். குவளையில் எடுத்து வைக்கப்பட்ட ஜலம் மூடி அரக்கு வைக்கப்பட்டது. குடத்தில் எடுத்து வைக்கப்பட்ட ஜலம் மூடி வைக்கப்படாதது. மூடி என்று சொல்வது **''நான், எனது''**

என்ற அஹங்கார அபிம[illegible] மூடி இல்லாதது என்றால் அது **சாட்சியாக** பார்த்துக் கொண்டிருக்கும் நிலையாகும்.

ஈஸ்வரன் என்ற குடத்தின் ஜலமானது எந்த வினாடியும் சமுத்திரத்தில் கொட்டினால் அது சமுத்திரத்துடன் ஐக்கியமாகிவிடும். ஜீவன் என்ற ஜலம் ஆனது மூடியை உடைத்தாலன்றி ஐக்கியமாக முடியாது. ஆகவே **''நான், எனது''** என்ற புசிப்பை விட்டு விடும்படி உங்கள் திருவடிகளில் பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.

ஈஸ்வரனில் பிரதிபலித்த மாயையிலிருந்து அனேக விசித்தர ரூபங்கள் தமக்குத்தாமே உண்டாயின. அது எப்படியென்றால் சலனமே சுபாவமான மாயா அந்தகாரத்தில், சுத்த தன்மாத்திரையான (இயற்கையான குணம்) அரூப ஆகாயம் உண்டாயிற்று. அதில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு **''சதாசிவம்''** என்று பெயர்.

அரூபமான ஆகாயத்தில் சப்தத்துடன் ஸ்பரிச தன்மாத்திரையான வாயு உண்டாயிற்று. அதில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு **''மகேஸ்வரன்''** என்று பெயர்.

ரூப அரூபமான வாயுவில் சப்த ஸ்பரிசத்துடன் ரூப தன்மாத்திரையான தேயு (அக்னி) உண்டாயிற்று. அதில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு **''ருத்ரன்''** என்று பெயர்.

ரூபமுள்ள அக்னியில் சப்த ஸ்பரிச ரூபத்துடன் ரஸ தன்மாத்திரையான அப்பு (ஜலம்) உண்டாயிற்று. அதில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு **''விஷ்ணு''** என்று பெயர்.

ரசமுள்ள ஜலத்தில் சப்த ஸ்பரிச ரூப ரசத்துடன் கந்த தன் மாத்திரையான பிருதிவி (மண்) உண்டாயிற்று. அதில் பிரதிபலித்த பிரம்மத்திற்கு **''பிரம்மா''** என்று பெயர்.

பஞ்ச பூதங்கள் ஐந்தும் மாயா அம்சமாகும். பஞ்ச கர்த்தாக்கள் ஐந்தும் பிரம்ம அம்சமாகும். பிரபஞ்ச உற்பத்திக்கு காரணமான மாயை பிரம்மத்தின் ஓர் அணு என்று சொல்லப்படும். மாயை என்னும் சாயையை (தோற்றத்தை) உடைய ஆகாயமும், ஆகாயத்தில் வாயுவும், வாயுவில் தேயுவும், தேயுவில் அப்புவும், அப்புவில் பிருதிவியும் அடங்கியிருக்கும்.

நிர்சலனமான (அசைவில்லாத) பரபிரம்மமானது, தமக்குத்தாமே உண்டாக்கிய சுழல் காற்றைப் போல, மாயையின் மூலம் பஞ்ச பூதங்களை ஒன்றுடன் ஒன்றை சேர்க்கும்.

அது எப்படியென்றால் பிருதிவி சொரூபமான பிரம்மாவானவர், ஐந்து குணமுள்ள (சப்த ஸ்பரிச ரூப ரச கந்தம்) பிருதிவியினால் அநேக அண்ட பிண்டங்களை (மண், மலை, மரம், செடி, கொடி) உருவாக்கினார்.

விஷ்ணுவானவர் நான்கு குணமுள்ள அப்புவால் அதாவது பிரம்மாவால் உண்டாக்கப்பட்டதை அழகுபடுத்தி, ரட்சிக்கத் தொடங்கினார். ருத்ரனானவர் மூன்று குணமுள்ள தேயுவினால் அதாவது ஹரியினால் ரட்சிக்கப்பட்டதை **"நான், என்னுடையது"** என்ற அபிமான அஹங்காரத்தைக் கொண்டு அழிக்கத் தொடங்கினார். மகேஸ்வரனானவர் இரண்டு குணமுள்ள வாயுவினால் மாயா சம்பந்தமான ஜீவர்களுக்கு ஓர் மயக்கத்தை உண்டு பண்ணுவார்.

சதாசிவன் ஏக குணமுள்ள ஆகாயத்தில் அனைத்து குணங்களையும் நீக்கிய தன்மையினால் தெளிவைக் கொடுப்பார். (ஆனால் அங்கு ஒரு சத்வ குணம் உண்டு).

மாயை என்பது பஞ்ச பூத அம்சமான தேக இந்திரிய கருவி கரணாதிகளை **"நான்"** என்னும் அகங்கார கிரந்தியை விளைவிக்கும் பிரம்மத்தின் சாயை (நிழல்).

பிரம்மத்தின் ஓர் அம்சம் ஆத்மா. அதாவது தனி ஒரு விருட்சத்திற்கு விருட்சம் என்றும், பல விருட்சங்கள் ஒன்றாக சேர்ந்தது தோப்பு என்றும், தனி ஒருவனுக்கு மனிதன் என்றும், பல மனிதர்களுக்கு கூட்டம் என்றும், ஓர் சிறிய ஜல பிரவாகத்திற்கு ஓடை என்றும், பெரிய ஜல பிரவாகத்திற்கு நதி என்றும் நாமத்தில் பேதப்படுகிறதே அன்றி ரூபத்தில் பேதமில்லை. அதேபோல பிரம்மத்திலிருந்து ஆத்மா தோன்றியது.

ஆத்மாவின் அம்சமே ஜீவன். எப்படியென்றால், ஜகத்தையும் ஜகத்தின் தோற்றத்தையும் **"நான், என்னுடையது"** என்று அகங்கரித்து, அபிமானத்தோடு பற்றிக் கொண்டு இருப்பதினால், அந்த பற்றுதலே ஓர் திரையாகும். அந்த திரையே ஜீவன் என்று உரைக்கத்தகும். இந்தத் திரை என்று நீங்குகின்றதோ அன்று ஜீவன் என்ற களை நீங்கி ஆத்மா பிரகாசிக்கிறது.

அதாவது ஜீவனுக்கு சாட்சியாக அறிந்து கொண்டு திருக்குவாகிய (காண்பானாகிய) ஆத்மா மாத்திரமே தனித்து இருக்கிறது.

பிரம்மா ஜாக்ரதாவஸ்தையில் (விழிப்பு நிலையில்) ஜீவனை நாநாவித போகங்களில் அலையச் செய்வார்.

விஷ்ணுவானவர் சொப்ன அவஸ்தையால் அழகைக் காட்டி ஜீவனுக்கு அநேகவித லீலைகளைக் காட்டுவார்.

ருத்ரனானவர் சுழுப்தி அவஸ்தையால் (ஆழ்ந்த உறக்கத்தில்) ஜீவனை தனியாக்குவார். மகேசனானவர் ஜீவனுக்கு துரிய அவஸ்தைக்கு இணையான ஓர் மயக்கத்தை உண்டு பண்ணுவார்.

சதாசிவமானவர் ஜீவனுக்கு துரியாதீத அவஸ்தைக்கு இணையான ஓர் ஆனந்தத்தை உண்டாக்குவார்.

மாயை சுகத்தை மறைத்து சுத்த சூன்யத்தில் பிரமிக்க செய்யும். பிரம்மம் சுயம்புவாக அறிவானந்த மயமாகவே இருக்கும். பரபிரம்மமான இந்த ஆனந்தத்தை மாயா விசேஷத்தால் இந்த ஜீவன் அறியான்.

காரணம், இந்த ஜீவன் துக்கத்தையே சுகமாக நினைத்து, அளவற்ற ஆசைக்கு உள்ளாகி, இச்சா சொரூபமான கோடான கோடி ஜென்மம் எடுத்து, ஜனன மரணம் என்னும் கடலில் மூழ்கி, கரையேறுவதற்கு ஓர் துறை காணாது துக்கத்தையே திரும்பத் திரும்ப அனுபவிக்கிறான்.

பஞ்ச பூதங்களால் உண்டான இந்த அண்ட பிண்ட பிரம்மாண்டங்களும் மாயையுடைய லீலையன்றி வேறு இல்லை.

ஹே மனிதா! விவேகத்தால் அறிவூன்றி விசாரித்தால் ஜீவ சப்தமே இல்லையே! எப்படியென்றால் தேகாதிகளை பஞ்ச பூதாம்சம் என நேதி செய்து பார்க்கையில், நான் என்னும் ஜீவ சப்தமும் சூனியம் ஆகும். தேகாதிகளை "**நான்**" என்று அஹங்கரித்து நிற்கும் பிரேமையே ஜீவன் அன்றி வேறில்லை. இதற்கு சாட்சியாகிய ஆத்மாவே பிரம்மமாகும்.

பிரம்ம அம்சமான பஞ்ச கர்த்தாக்களில் யாரை பரதெய்வமென்று நம்பி தியானம், ஸ்தோத்திரங்கள் செய்தாலும், அந்த பர பிரம்மத்தையே தியானம், ஸ்தோத்திரம் செய்ததாகும். ஆதலாலே அனேகர் எந்த தெய்வமானாலும் சரி; தேக வியோகம் (மரணம்) ஆகிற பரியந்தம் நம்பி, அந்த தெய்வத்தின் அருளால் மோக்ஷம் பெறுகிறார்கள்.

ரூபமுள்ள தெய்வங்களை தவிர அருபமான பரபிரம்மத்தை தியானித்தல் வெகு துர்லபம். ரூபத்திலேயே நிலைக்காத மனம் அரூபத்தில் நிற்பது முடியாத காரியம். ஆகவே இக்கலியில், ரூபமுள்ள பிரம்மத்தை நாடுவது சாலச் சிறந்தது. பரபிரம்மமே சிருஷ்டியாதி காரியங்களை செய்கிறது என்றால் நிர்சலன வஸ்து என்று உரைக்க முடியாது.

நினைத்த மாத்திரத்தில் சகலமுமே உண்டாயிற்று என்றால், நினைப்பு இருந்தால் மறப்பும் இருக்குமே?, இரண்டும் இருந்தால் விகாரம், விவகாரம் உண்டே! ஆகையால் எல்லாம் பிரம்மமே என்று சொல்லக்கூடாது. ஆதலினால் திரிமூர்த்திகளாலேயே சிருஷ்டி ஸ்திதி, லயம் நடக்கிறது. ஆகவே இவர்களை முக்கியமாக பூஜிக்க வேண்டும்.

ஒரு சாதனையாளனுக்கு மூன்று வித நிலைகள் உண்டு. அவைகள்

1. மர்க்கட ரீதி 2. பட்சி ரீதி 3. பிபீலிகா ரீதி என்பனவாகும்.

1. மர்க்கட ரீதி :

மர்க்கடம் என்பது குரங்கின் நிலையாகும். குரங்கானது தமக்கு கிடைக்கப்பட்ட உணவை எடுத்து மரத்திற்கு மரம் தாவிச் சென்று அதை சாப்பிட முயற்சி செய்யும். அப்பொழுது இரை இடையிடையில் தவறி விடலாம்.

2. பட்சி ரீதி :

பறவையானது தன் உணவை எடுத்துக் கொண்டு பறந்து சென்று ஓர் மரத்தில் வைத்து சாப்பிட எண்ணலாம். அங்கும் செல்லும் பாதையில் இரை தவறி விடலாம்.

3. பிபீலிகா ரீதி :

பிபீலிகா என்பது எறும்பாகும். எறும்பானது எப்போதும் தன் சக்திக்கு தக்க உணவைத்தான் எடுக்கும். அந்த உணவை நிதானமாக கொண்டு சென்று தன் புற்றில் சேர்த்து வைத்து சாப்பிடும். அது தமது உணவை வழியில் தவற விடுவது இல்லை.

இதைப்போல ஒரு சாதனையாளன் நிதானமாகவும், பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் அந்த ஒன்றிற்கு முயற்சி செய்தானானால் முடிவு என்றும் நலமாகவே இருக்கும்.

ஜீவன் முக்தி என்பது, தன்னை அறிந்து, தான் இன்னான் என்று அதாவது இந்த நாடு, மதம், இனம் என்ற பேதமற்றவனாய், தன்னை மறந்து, தாமே பிரம்மம் என்று உணர்ந்து அந்த சாதனத்தினால் பரபிரம்மத்திற்குள் ஐக்கியமாகி ஆனந்த சாகரத்தில் மூழ்கி இருப்பவனே பிரம்மஞானி (சகஜ ஞானம்) அதாவது ஜீவன் முக்தியாகும்.

சகஜ ஞானம் :

ஓர் மரத்தில் இருக்கப்பட்ட காய்கனிகளின் மேல் இச்சை கொண்டவன் ஒரு கழியின் துணை கொண்டு வளைத்து இழுத்து சாப்பிட முயற்சி செய்வான். அந்த கனியானது கிடைத்தாலும் கிடைக்கும், கிடைக்காமலும் போகும். அதற்கு பயிற்சியும் முயற்சியும் தேவை. மற்றொருவன் எந்த ஒரு பயிற்சியும் முயற்சியும் இல்லாமல் **“அதுவே நாம், நாமே அது”** என்று ஓர் எண்ணத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்ற எண்ணங்களை விட்டு விடுவான். அவனுக்கு அந்த காய்கனிகளின் கிளை தாமாகவே வளைந்து கொடுக்கும்.

அவன் எந்த முயற்சியும் இல்லாமல் சாப்பிட முடியும். இதுவே சகஜ நிலையாகும். இந்த பிரம்ம ஞானமானது சகஜமாகவே கிடைக்க வேண்டுமேயன்றி முயற்சியும் பயிற்சியும் அங்கு செல்லாது.

இப்படிப்பட்ட மேலான லாபத்தை விடுத்து, துன்பத்தைக் கொடுக்கும் இல்லறத்தை அடுத்து (நடத்தும்), அரிதான ஆயுளையும் கெடுத்து, கர்மம் என்னும் பெரு மூட்டையை சுமந்து, பொதி சுமக்கும் மாட்டைப் போல் இருந்தால், நாளை எமன் வந்தால் என்ன செய்வாய்?

ஒரு நாளில் அழிந்து போகும் இந்தத் தேகத்தை மெய்யென நம்பி, அரை நிமிடம் வீண் காலம் கடத்தலாகுமா? மண்ணில் செய்த பாண்டம் உடைந்ததும் மண்ணே ஆவது போல, பரம பக்தியும், ஜீவன் முக்தியும் அடையாதவர்கள் சரீரம் இருந்தும் பிரேதமே.

மத போதகர்களுக்கு சதுர் (நான்கு) வேதமும் சங்கையாகும் (சந்தேகமாகும்). சுத்தமுள்ள சாதுக்களுக்கு **''அது நீ'' (தத் த்வம் அஸி)** என்று ஒரு மொழியே போதும்.

ஈரேழு புவனமும், விசித்திரமான தோற்றங்களும், கோடான கோடி அண்டங்களும் எத்தனை யுகம் இருந்தாலும், ஓர் காலத்தில் பூமியில் அடங்கி போகும்.

பூமியோ சூரியனின் உஷ்ணத்தினால் சம்பலாய்ப் போகும்.

அந்த சாம்பலோ பிரசண்ட (புயல்)வாயுவினால் தூசாகி வருணனினால் ஜலமாகிப் போகும்.

அந்த ஜலமோ அக்னியில் வற்றிப் போகும்.

அக்னியோ வாயுவில் ஒடுங்கிப் போகும்.

வாயுவோ ஆகாயத்தில் அடங்கிப் போகும்.

ஆகாயமோ இருள் மயமான மாயையில் அடங்கிப் போகும்.

மாயையோ தன் சாமர்த்தியம் கெட்டு சூரியனைக் கண்ட பனி போலவும், அக்னியில் விழுந்த சருகு போலவும், சுத்த சூன்யமாய் பிரம்மத்தில் மயமாகிவிடும்.

இந்த பிரம்மஞானம் லேசில் அடைவதற்கு சத்குருவின் ஆசியும், இஷ்ட தெய்வத்தின் அனுக்கிரகமும் அவசியம் இருக்க வேண்டும். அத்துடன் துரிய திருஷ்டியை (அதீதபார்வை) மேவி, திக்கு தேசாதிகள் மறந்து, பேய் பிடித்தவன் போலும், விபரம் அறியா சிசுவைப் போலும், பித்தனைப் போலும் அலையும் சகஜ ஞானிகளைத் தேடி, கண்டு பிடித்து, அவர்களுக்கு அன்ன பானாதிகள் ஊட்டி குற்றேவல் (சேவை) செய்தால் அனைத்தும் கைகூடும்.

பக்தன் ஞானியாகும் நிலை

பால் போன்ற உள்ளம் கொண்ட குழந்தைகளே!

பாலின் உள்ளேயே வெண்ணெய் இருக்கிறது. ஆனால் தோற்றுவதில்லை. அது போல் உங்களுக்குள்ளேயே அந்த ஒன்று இருக்கிறது. அந்த ஒன்றினை உங்களால் உணர முடியவில்லை. காரணம், ஆசையாகிய பசை உங்களுக்குள்ளேயே இருக்கிறது. அந்த பசை என்று குறைந்து குறைந்து குறைந்து மறைந்து போகிறதோ அன்று அந்நிலை பெறுவீர்கள்.

பாலில் ஜலம் விடுவார்கள். ஜலத்தை அந்த பால் காட்டுவதில்லை. அதுபோல் உங்களுக்குள் இருக்கப்பட்ட ஆசையையும், குரோதமும் உங்களை அறியாமலேயே மறைந்து இருப்பதால், மறைந்து இருப்பது என்பதைவிட வாசனையினால் (குணங்களினால்) உங்களை நீங்களே மறந்து விட்டீர்கள் என்பதே பொருந்தும்.

பாலைக் காய்ச்சும் போது செயற்கையாக விட்ட ஜலம் வற்றிவிடுகிறது. பால் சுத்திகரிக்கப்படுகிறது. அதுபோல் உங்கள் உள்ளமாகிய பாலை **"பக்தீ"** என்ற அக்னியைக் கொண்டு சுத்தப்படுத்தும் போது உங்கள் இல்லாத வாழ்க்கையில் சோதனையும், வேதனையும் வந்தே தீரும். அதைத் தாங்கிக் கொள்ள அளவற்ற பொறுமை வேண்டும். அதாவது காட்சிகளையும் வார்த்தைகளையும் மறந்து, உங்கள் நாவு அடங்கி இருத்தலே ஆகும். இந்நிலை பெற்றுவிட்டால், உங்கள் உள்ளம் ஓரளவு பக்குவப்பட்டு விட்டது என உணருங்கள்.

அந்நிலையில் குருதேவர் சொல்லும் ஓர் வாக்கியம் பாலுக்கு பிறையிட்டது போல், எப்படி பாலின் வெண்மை மாறாமல், திட வஸ்துவான தயிராகிறதோ, அதுபோல் உங்களுக்கு கலக்கமோ, துக்கமோ, பயமோ வராது. குருதேவர் சொல்லும் ஓர் வாக்கியமானது **''அதுவே நீ'', ''நீயே அது''** **(அஹம் பிரம்மம், பிரம்மம் அஹம்)** என்ற உபதேசமாகும். அந்த திடத்தன்மையை நிர்மூலமாக்குவது போல, தயிரை எப்படி கடைகிறோமோ, அதுபோல் உங்கள் உள்ளமாகிய தயிரும் கடையப்படுகிறது.

இதை ஓர் நிலையில் சொல்வது என்றால் தூல உபாதிகளும், மனோபயமும் உங்களை பாதிக்கும். அந்தந்த சிரமங்கள் அவரவர் மனதிற்கும், வினைக்கூட்டிற்கும் இயல்பாக வந்து ஞானத்தை உண்டு பண்ணும். **''போதும்''** என்ற நிறைவு என்று வருகிறதோ, அன்றுதான் நீங்கள் வெண்ணெயாக அதாவது ஞானியாக முடியும்.

ஞானி ஆவதைவிட ஞானம் ஆகுவதே சாலச்சிறந்தது. ஞானத்தைப் பெற்றுக் கொண்டால் மட்டும் போதாது. இங்கு நாம் ஓர் நிலையை உணர வேண்டும். நாம் ஞானம் பெற்றுவிட்டோம் என ஒரு மயக்கம் உண்டாவது வெண்ணெயாக இருக்கும் நிலையாகும். எப்படி தயிரிலிருந்து கடைந்த வெண்ணெயை எடுத்து மோரிலோ ஜலத்திலோ வைத்து விட்டாலும் கூட சில நாட்களில் அந்த வெண்ணெயானது கெட்டுப் போய்விடுமோ, அதுபோல அந்த மயக்கத்திலேயே இருந்து விட்டால் அங்கு சுய அனுபவம் இருக்காது. சாஸ்திர ஞானமும் வாய் ஞானமும் தான் இருக்கும். ஆதலினால் வெண்ணெயை உருக்கி அது நெய்யாக அதாவது ஞானமாக ஆனாலன்றி உங்கள் பயிற்சி முற்றுப் பெறாது.

நம் பிராப்தாதீனமான தூலம் தெய்வாதீனத்தால் நடைபெறும். நாம் தூல இயக்கத்தை மறக்க முடியும். தூல இன்ப துன்பத்தினால் மனம் பாதிக்கப்பட மாட்டாது. "எல்லாம் நலமே, எல்லாம் சுகமே, எல்லாம் சிவமே" என பிரம்மானந்தம் ஒன்று தான் தோற்றுமே அன்றி இன்ப துன்பங்கள் தோற்றாது.

யஜுர் வேதமும், சாம வேதமும் கூறும் "அஹம் பிரம்மாஸ்மி" (நாமே பரம்பொருள்) "தத் த்வம் அஸி" (அது நீயாக இருக்கிறாய்) இந்நிலை ஸ்வய அனுபவமாக வரும் போது அதர்வண வேத மஹாவாக்கியமாகிய "அயம் ஆத்மா பிரம்மம்" அதாவது அதுவாக நாம் இருக்கிறோம் என்ற நிலையே முடிந்த முடிவாகும்.

இந்த அனுபவத்தை சொல்வதாக இருந்தால் நெய்க்கு வாசனையும், குணமும், சுவையும், எப்படி இல்லையோ, அதுபோல நாம் இரண்டற்ற தன்மையினால் எண்ணத்திற்கோ, சொல்லுக்கோ, செயலுக்கோ அங்கு இடம் கிடையாது. இந்நிலை பெற ஆசி வழங்குகிறோம்.

குழந்தைகளே!

இதற்கு ஸ்ரீ ஜெயதேவருடைய சில அனுபவ வாசகங்களைத் தருகிறோம்.

பக்தி, ஞானம் என்று வாயினால் சொல்லிக் கொண்டு ஒருவருக்கும் போதனை பண்ணிக் கொண்டும், சாஸ்திரங்களில் இருந்து நிறைய விளக்கங்கள் கொடுத்துக் கொண்டு இருந்தாலும் அது பிரயோஜனம் இல்லை. எப்படியென்றால் அன்னம் என்று சொல்வதினால் பசி நீங்குமா? தீபம் என்று சொல்வதினால் இருள் நீங்குமா? கங்கை என்று சொல்வதினால்

பாப நிவாரணம் ஆகுமா? ஔஷதம் (மருந்து) என்று சொல்வதினால் பிணி நீங்குமா? குரு என்று சொல்வதினால் கிருபை உண்டாகுமா? அதைப்போல வாய்ஞானம் பலனளிக்காது. இதற்கு தெய்வத்தினிடத்திலும், குருவினிடத்திலும் சிரத்தை வேண்டும். அதாவது நம்பிக்கை வேண்டும். உலகம் மித்தை என ஆசைகளை தள்ளுவதற்கு வைராக்கியம் வேண்டும்.

வைராக்கியத்தில் அனேகம் உண்டு. அதாவது சாஸ்த்திரங்களை படிக்கும் போது மாத்திரம் அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும், பாபம் செய்யக் கூடாது. புண்ணியமே செய்ய வேண்டும், பகவானையே நினைக்க வேண்டும் என்று அந்தந்த காலங்களில் மட்டும் நினைப்பது "புராண வைராக்கியம்" எனப்படும்.

ஒரு பிரேதத்தை சுமந்து கொண்டு போகும் போது மாத்திரம் என்ன வாழ்வு? என்ன சம்சாரம்? எல்லாம் துக்கம், எல்லாம் மாயை என்று எண்ணுவது "மயான வைராக்கியம்" எனப்படும்.

ஒரு பெண் பிரசவ வேதனைப்படும் போது இனி கணவன் பக்கத்திலேயே போகக் கூடாது என்று உறுதியாக நிச்சயம் செய்து கொள்வது போல, குடும்பத்தில் ஒரு சங்கடம், பல சிரமங்கள் வரும்போது உலகமே மாயை, உலகமே துன்பம், இன்பம் அணுவளவும் இல்லை இனி பேரின்பத்தை அடைய வேண்டும் என முடிவு பண்ணுவது "பிரசவ வைராக்கியம்" எனப்படும்.

குடும்பத்தில் சில அபராதங்களையும், சில அக்கிரமங்களையும் அறியாமல் செய்தவர்களை வெட்டி தன் குரோதத்தை முடித்துக்

கொண்டு சன்யாசியாகப் போவது **''மூட வைராக்கியம்''** எனப்படும்.

மூர்த்தி துவேஷத்தால் சிவனே பர தெய்வம், விஷ்ணுவே பர தெய்வம், அம்பாளே பர தெய்வம் என்றும், இயேசுவே பர தெய்வம் என்றும், அல்லாவே பர தெய்வம் எனக் கூறும் மத குருக்களை நம்பி துவேஷமாக இருப்பது **''மத வைராக்கியம்''** எனப்படும். இதைப்போல எத்தனையோ அக்ஞான வைராக்கியங்கள் உண்டு.

''நான், என்னுடையது'' என்பது முழுமையாக அற்றுப் போவது ஞானம் என்று உரைக்கத்தகும். ஞானமில்லாத வைராக்கியம் வைராக்கியமாகாது. அணு முதல் பிரம்மாண்டம் பரியந்தம் பிரம்மமே நிறைந்திருக்கிறது.

பரிபூரணமாகிய பிரம்மத்தை தவிர நாம் வேறில்லை, காலாதீதமான அந்த ஒன்றே, பந்தத்தினால் ஜீவன் என்றும், பந்த நிவர்த்தியினால் ஆத்மா என்றும், சர்வ சாட்சியாக இருப்பதினால் பரமாத்மா என்றும், பரமாத்மாவே பரம்பொருள் என்றும் உறுதி பூண்டு கற்பனையைக் கெடுத்து, பூரணமாக இருப்பது **''பூரண வைராக்கியம்''** எனப்படும்.

கானல் ஜலத்திற்கு நிகரான பிரபஞ்சத்தை சுத்தமாக மறந்து, ஸ்திரீயாதி போகங்களை காகத்தின் எச்சத்தைப் போல் தள்ளி, காம குரோதாதி அறுவரையும் (காம, குரோத, லோப, மோக, மத, மாத்சரியம்) அடியோடு வெட்டி சாய்த்து, குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். நம்மையன்றி குடும்பம் நடைபெறாது என்ற மோக இச்சையைத் தேய்த்து, இல்லாமல் தள்ளி, ஆனந்த சமுத்திரத்தில் தன்னை மூழ்க வைத்து, பிரம்ம மாத்திரமாக இருப்பது **''யதார்த்த வைராக்கியம்''** எனப்படும்.

சத்குருவின் மேல் அதிக பிரீதி உடையவனாய் எப்பொழுதும் சாதுக்கள் சங்கத்தை விடாமல் ஒவ்வொரு வினாடியும் **''தாம் பிரம்மம்''** என்று மனனம் பண்ணி, சரீர பாவனையை நீக்கி, மானாபிமானத்தை போக்கி, தன்னை பிரம்மத்திற்கு உள்ளாக்கி, அகண்டானந்த, நிராமயமான சாட்சியாய் இருப்பது **''சத்பாவ வைராக்கியம்''** எனப்படும்.

கர்மங்கள் எல்லாம் குணங்களினால் பிரவர்த்திக்கிறது. யாமோ குணாதீதன், கர்மா, பக்தி, யோகம், மந்திரங்களினால் ஒரு பிரயோஜனமும் இல்லை என அடங்கி இருந்து, ஒன்றையும் கேட்கா மௌனமும், நாவு அடங்கிய மௌனமும், ஒன்றையும் நினையா மௌனமும், ஒன்றையும் இச்சிக்காத ஜீவ மௌனமும், சதா சமாதி நிஷ்டனாய் அத்வைத பாவம் அடைந்திருப்பது **''அபாவ வைராக்கியம்''** எனப்படும்.

சுக துக்கமயமான சரீரம் பிராப்தாதீனம் என்று, அவைகளில் எண்ணத்தைப் புகுத்தாமல், தேக போஷனையையும், தேக பீதியையும் விடுத்து, விதிநிஷேதங்களை (கட்டுப்பாடு) தள்ளி, தூலத்திற்கு வரும் சுக துக்கத்தை சமமாக பாவித்து எந்த வினாடியும் துரிய திருஷ்டியை மேவி இருப்பது **''திட வைராக்கியம்''** எனப்படும்.

பேரிடி விழுந்தாலும், சரீரமே சிதைந்தாலும் சற்றும் பயம் இல்லாமல் **''யாம் விநாசன், யாம் அனாமயன் (நோயற்றவன்), யாம் பரிபூரணன்''** ஆகையால் எமக்கு மரணம் ஏது? ஜனனம் ஏது? புண்ணிய பாபம் ஏது? மோட்சம் நரகம் ஏது? எமக்குள்ளாகவே இப்பிரபஞ்சம் முழுவதும் முழு மித்தையாய் உதித்து ஒடுங்குகின்றது என்று நிர்ச்சலனமாக இருப்பது **''விசார வைராக்கியம்''** எனப்படும். இப்படி இன்னும் அனேக ஞான வைராக்கியங்கள் உண்டு.

இவைகளில் ஏதாவது ஒன்றை மனோநிலைக்குத் தக்கபடியும், வினைக்குத் தக்கபடியும், அவரவர் ஏற்றுக் கொள்ளலாம். இவைகளை ஏற்றுக் கொள்வதற்கு பிரம்மானந்தத்தை விரும்பியவன் முதலில் சகுணமாகிய (நாம ரூபமுள்ள) ஒரு பிரம்மத்தை அதாவது தெய்வத்தை அன்பாக உபாசிக்க வேண்டும். இந்த உபாசனையினால் பெரிய நெருப்பில் (காடாக்னியில்) விழுந்த சருகுபோல், சகல ஆகாமிய பாபங்களும் சாம்பலாய்ப் போகும். இதனால் புண்ணியம் நேரிடும். இந்த புண்ணியத்தினால் அநித்தியமான சம்சாரம் துன்பமாகத் தோற்றும். நித்திய மோட்சத்தைக் காட்டும். சத்குரு தரிசனம் கிடைக்கும்.

அந்த சத்குருநாதனுக்கு அன்புடன் பணிவிடைகள் செய்து வந்தால் பெரும் காற்றில் சிதறி போகும் மேகத்தைப் போல சஞ்சித கர்மங்கள் சிதறுண்டு போகும். அதனால் மேலும் மேலும் ஆனந்தம் உண்டாகும். பின்பு ஸ்ரீ குருதேவர் உபதேசிக்கும் மகாவாக்கியத்தை (அஹம் பிரம்மம், பிரம்மம் அஹம்) தைலதாரை போல் சிந்திக்க வேண்டும். இந்த தியானபலத்தினால் காற்றில்லா இடத்தில் இருக்கும் தீபத்தைப் போல சகல சஞ்சலங்களும் நீங்கி ஏகாக்ர சித்தி உண்டாகும்.

பிறகு தேகாதிகள் நாமல்ல. ஆதலால் நமக்கு தர்மார்த்த பந்த மோட்சங்கள், ஜரா மரணங்கள் (பிறப்பு, இறப்பு) முக்காலத்திலும் இல்லை. ஜனனமில்லா எமக்கு மரணம் ஏது? ரூபமில்லா எமக்கு விகாரம் ஏது? மரணமில்லா எமக்கு பயம் ஏது? ஊசிநாட்ட இடமில்லாமல் பரிபூரணமாக இருக்கும் எமக்கு தேகம் ஏது? முக்காலத்திலும் ஒரு இயல்பாக இருக்கும்

எமக்கு காலம் ஏது? காலாதீதமான எமக்கு, முன்னும் பின்னும் மித்தையான இந்த இந்திர ஜாலத்தைப் போல இருக்கும் இந்த பிரபஞ்சம் ஏது? யாமே ஸ்வயம் பிரகாசம், யாமே பரசொரூபம், யாமே பரப்பிரம்மம், **''யாமே பரமாத்மா, யாமே ஜீவாத்மா, யாமே சகலமும், எம்மையன்றி வேறு எதுவும் இல்லை''** என்ற நிதித்யாசத்தினால் தெளிக!

குழந்தைகளே!

தேகாதிகளை மறந்து, திக்கு தேகாதிகள் இறந்து, தான் இன்னார் என்று அறியாமல், சுத்த அசுத்தத்தை குறியாமல், போவதுவும், வருவதுவும், பேசுவதுவும், உண்பதுவும், சொப்பன காட்சி போல, உணர்ந்தும் உணராமல், பேயனைப் போலும், பித்தனைப் போலும், விவரம் அறியா சிசுவைப் போலும், ஹரிஹராதிகள் பிரத்யக்ஷம் ஆனாலும் மாயாமயம் என்று அறிந்து, தலை அரிவதும் (துண்டிக்கப் படுவதும்) தெரியாமல், பிரம்மானந்தம் மேலிட்டு ஜாக்ரதாவஸ்தையில் சுழுப்தி நிலையை மேவி பிரம்ம மாத்திரமாக இருப்பது சாட்சாத்காரம் ஆகும்.

முக்கியமாய் பரமாச்சாரியார் (குருதேவர்) மேலும், இஷ்ட தெய்வத்தின் மேலும், சிரவணார்த்தங்கள் (கேட்டல்) மேலும் நம்பிக்கை பரிபூரணமாக இருக்க வேண்டும். பரமாச்சாரியார் மீது இருக்கும் நம்பிக்கையானது, பிரம்ம ஞானத்தைக் கொடுக்கும். இஷ்ட தெய்வத்தின் மீது இருக்கும் நம்பிக்கையானது பாப விமோசனம் ஆக்கும். சிரவணார்த்த சிரத்தை இல்லாதவனுக்கு ஞானம் லபிக்க மாட்டாது. எப்படி ருது

ஆகாத கன்னிகைக்கு கர்ப்பம் தரிக்காதோ, அப்படி சிரத்தை (நம்பிக்கை) இல்லாதவனுக்கு ஞானம் மனதில் தரிக்காது.

சிரத்தையே ருது
உபதேசமே பிந்து
ஞானமே கர்ப்பம்
ஆனந்தமே சிசு!

இவை நான்கும் சத்குரு கிருபையில்லாமல் பலிதமாகாது. தன்னை மறந்து தான் இறந்து முழுநிலைபெறும் பரியந்தம், இந்த மூன்றிடத்திலும் சிரத்தை பரிபூரணமாக இருப்பவனுக்கு **''பிரம்மானந்தம்''** உதயமாகும்.

முடிவுரை


இப்படிப்பட்ட ஆத்ம வித்தையை பக்குவமில்லாத ஜீவனுக்கு சொன்னால், அவனை எரிநரகில் தள்ளி விட்டதாகும். சொல்லப்பட்ட ஆசானும் கடும் தண்டனைக்குள்ளாவான். ஏனென்றால் உலக வாசனையிலேயே ஜென்ம ஜென்மாந்திரங்களாக ஊறிப் போயிருக்கிற ஜீவனுக்கு அந்த வாசனைகளை களையும் நிமித்தம் ஒழுக்கமான கர்மா, நிலையான பக்தி, விவேகமான வைராக்கியம் இந்த மூன்றையும் கொடுத்து அவன் பக்குவப்பட்டு விட்டானா எனத் தெரிந்து கொண்ட பின்னர்தான் போதிக்க வேண்டும். இந்த ஆத்ம வித்தையானது கொடுக்கப்படுவதும் அன்று, காட்டப்படுவதும் அன்று, நடத்திச் செல்லப்படுவதும் அன்று, ஒவ்வொரு ஜீவனும் அதுவாகவே இருக்கிறான். உலக வாசனையாகிய பந்தம், சொந்தம் ஆகிய அறியாமையினால் (கவனக் குறைவால்) தமக்குத் தாமே திரை போட்டு மூடிக் கொண்டிருக்கிறான். அந்த திரையை அகற்றுதலே ஆத்ம வித்தையாகும். அனுபவமுள்ள குருவே அந்த திரையை அகற்ற கற்றுக் கொடுக்க முடியும்.

சாமான்ய குரு மேலும் மேலும் தேவையற்ற பக்தி, தேவையற்ற கர்மா, தேவையற்ற மந்திரங்கள், தேவையற்ற உபாசனைகள் இவைகளைக் கற்றுக் கொடுத்து திரையை விலக விடாமல் செய்வார்கள். ஒழுக்கத்தைப் பழகாத எந்த ஜீவனும் பந்த பூாசத்திலிருந்து மீள முடியாது. ஒருவனுடைய பந்தத்திற்கும், பாசத்திற்கும் அவனுடைய வாக்கே காரணமாக இருக்கிறது. ஆகவே **வாக்கை புத்தியில் ஒடுக்கி (மனம்),**

மனதை ஆத்மாவில் ஒடுக்கி, ஆத்மாவை பரமாத்வாவில் ஒடுக்க வேண்டும். இதுவே **''தத் துவம் அஸி''**யின் ரகசியார்த்தமாகும்.

குழந்தைகளே!

அஞ்ஞான உறக்கத்திலிருந்து சீக்கிரம் விழித்தெழுங்கள்! பிறகு என்றோ, நாளை என்றோ ஒத்திப் போடக் கூடாது. அடுத்த வினாடி காலன் வந்தால் ஜென்மா வீணாகிவிடும். அனைவரும் திரையை நீக்கத்தான் வந்தீர்களே தவிர மேலும் மேலும் திரையை போடுவதற்காக அல்ல. உங்களுக்கு என்றும் எம் நல்லாசிகள்.



நான்கு மஹாவாக்கிய ஞானம்

ஸ்ரீ சத்குரு திருவடி துணை!

ஸத்யம் பேசுக !
தர்மம் செய்க !!
நாவை அடக்குக !!!
வாக்கை காக்க !!!!
கருணையோடு இருக்க !!!!!

ஓம் ஸத்!

மகாவாக்கியம் ஓர் அறிமுகம்

ஓ எம் அருள்ஞானக் குழந்தைகளே!

1. மானுட ஜன்மம்

''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்கிறாள் தமிழ் மூதாட்டி ஔவையார். அப்படி இந்த மானிட ஜன்மத்திற்கு என்ன சிறப்பு உள்ளது என்று ஆராய்ந்தோமானால், பிறப்பு - இறப்பு என்னும் இந்த சம்சார சுழற்சியிலிருந்து விடுபட்டு, மனிதன் தனது நிஜ சொரூபத்தில், அழிவற்று, நித்திய, சுத்த சுபாவத்துடன் இருக்க வேண்டுமானால் அதற்கான வாயில்படியாக அமைந்துள்ளது இந்த மானுட ஜன்மமேயாகும். தேவர்கள், கின்னரர்கள் போன்ற மேல் லோக வாசிகளானாலும். அசுரர்கள் போன்ற கீழ் லோக வாசிகளானாலும், பறப்பன, ஊர்வன, நீந்துவன போன்ற மற்றய ஜீவராசிகளானாலும் இந்த மோக்ஷ நிலையை அடைய வேண்டுமானால், மானிட ஜன்மத்தின் மூலமாகவே அது சாத்தியமாகும். இத்தனை சிறப்புடையது

இந்த ஜன்மம். இதனையே நம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறும் பொழுது,

"அரிய இம்மானிட பிறவியை பெற்றும்
எவன் ஒருவன் இறைவனை அடைய
முயற்சி செய்யாது இருப்பானோ அவன்
வீணில் பிறந்தவனே ஆவான்"

என்று அழுத்தம் திருத்தமாக கூறுகிறார். அந்நிலையை அடைதல் எவ்வாறு?

2. வேதங்கள்

உலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அவர்கள் தொழிலால், பதவியினால், உள்ளத்தால், வாழும் தேசத்தால், பழக்க வழக்கங்களால், வளரும் சூழ்நிலையால் வேறுபடுகின்றார்கள். ஆகவே மானுட ஜன்மத்தின் குறிக்கோள் ஒன்றாக இருந்தாலும் அவரவர்கள் நிலைக்கு தக்கவாறு வழிமுறைகள் நிச்சயம் வேறுபட்டேயாக வேண்டும். அவரவர்கள் எந்தெந்த வழியில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் அந்த லட்சியத்தை அடைய முடியுமோ, அதை விளக்கி கூறும் நல்வழிகாட்டிகளே நமது சனாதன வேதங்களாகும். வேதம் என்னும் வார்த்தைக்கு "அறிவு" என பொருள்படும். இது ஒரு நூல் அல்ல. பண்டை காலத்திலிருந்து, இவ்வுலகில் முறைப்படி வாழ்ந்து நிறைநிலையடைந்த மகான்கள், ரிஷிகள் போன்றவர்களின் ஞான அனுபவங்களாகும். ஆகவே அது ஒரு தொகுப்பாகும். அதற்கு ஆரம்பம் உண்டு, முடிவு இல்லை. வரும் காலத்திலும் எத்தனையோ மகான்கள், முனிவர்கள் தோன்றலாம், புதுப்புது பாதைகள் காட்டலாம்,

அவற்றையும் தனக்குள் ஏற்றுக்கொள்ள நம் வேதமாதா கை நீட்டி காத்திருக்கிறாள். இதுவே நம் வேதத்திற்கு மிகமிக பெருமை சேர்க்கும் விஷயமாகும். ஒன்றாகிய வேதத்தை நான்காக பிரித்து நமக்கு அளித்தவர் மகான் பராசரரின் தவக்குழந்தையாகிய கிருஷ்ணத்வைபாயனர் என்னும் வியாசர் ஆவார். வியாசர் என்னும் வார்த்தைக்கு தொகுத்தவர் என பொருள்படும். அந்த நான்கு பிரிவுகள் ரிக் வேதம், யஜூர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் ஆகும். இந்த ஒவ்வொன்றையும் மேலும் இரு பிரிவுகளாக பிரித்தார். அவை கர்ம காண்டம், ஞான காண்டம் என்பவை ஆகும். மனிதன் இகத்தில் வாழ்வதற்காக செய்ய வேண்டிய கர்மங்களை எப்படி செய்தால் அது முடிவில் பரத்திற்கு வழிகாட்டுமோ அத்தகைய கர்ம விதிகளை கூறுவது கர்ம காண்டமாகும். மேலும், மனிதன் வாழ்வின் கடைசி முடிவாக அடைய வேண்டிய லட்சியமாகிய பரத்தைப் பற்றி கூறுவது ஞான காண்டமாகும்.

3. மகாவாக்கியம்

மனித வாழ்வின் லட்சியத்தை ஆணித்தரமாக சுட்டிக்காட்ட விரும்பிய நான்கு வேதங்களும் அதனை நான்கு வாக்கியங்களில் சுருக்கமாகவும், தெளிவாகவும் அடித்து கூறுகின்றன. இந்த வாக்கியங்கள் மனித வாழ்வின் கடைசி, உயர்ந்த குறிக்கோளை கூறுவதனால் அவற்றிற்கு **மகாவாக்கியங்கள்** என பெரியோர்கள் கூறினார்கள். இங்கு வார்த்தைகள் வேறுபட்டாலும் ஒரே லட்சியத்தையே அவை சுட்டிக்காட்டுகின்றன. மேலும் இந்த வேதங்களின் கடைசியிலேயே இவை வருவதனால் இதனை வேதாந்த ரகசியங்கள் எனவும் பெரியோர்கள் கூறுவார்கள். இதன் பெருமையும், மதிப்பும் அளவிடுவதற்கு அரிதாக

இருப்பதனால் இதனை மிக மிக இரகசியமாகவும் போற்றி பாதுகாத்து வந்தார்கள். அந்த மகாவாக்கியங்களாவன :

1. ரிக் வேதத்தின் கடைசியிலுள்ள
   (ஐதரேய உபநிஷதத்தில் வருவது)

''பிரக்ஞானம் பிரம்மம்''
(உயர்ந்த அறிவே பிரம்மம்)

2. யஜுர் வேதத்தின் கடைசியிலுள்ள
   (ப்ருஹதாரண்ய உபநிஷதத்தில் வருவது)

''அஹம் பிரம்மாஸ்மி''
(நாமே பிரம்மமாக இருக்கின்றோம்)

3. சாம வேதத்தின் கடைசியிலுள்ள
   (சாந்தோக்ய உபநிஷதத்தில் வருவது)

''தத் த்வம் அஸி''
(அது நீயாக இருக்கின்றாய்)

4. அதர்வண வேதத்தின் கடைசியிலுள்ள
   (மாண்டூக்ய உபநிஷதத்தில் வருவது)

''அயம் ஆத்மா பிரம்மம்''
(எனது ஆத்மாவே பிரம்மம்)

மஹா வாக்கிய ஞானம்

ஓ எம் அருள்ஞானக் குழந்தைகளே!

உங்கள் தூலத்தின் பணிவும், உள்ளத்தின் கனிவும் பணிவும் இணைந்து, அனைத்தும் ஒன்றென உணர்ந்து, அந்த ஒன்றே நாம் எனத் துணிந்து, வைராக்ய சீலர்களாய், ஆனந்த பரர்களாய், சுதந்திர புருஷர்களாய் ஆகுக என ஆசி கூறுகின்றோம். இதற்கு எம் ஸ்ரீமத் ரிபு கீதையிலிருந்து நான்கு மஹா வாக்யங்களுக்கு மட்டும் சுருக்கமாக தெளிவு தருகின்றோம்.

படித்து! ஆழ்ந்து! உணர்ந்து! மயமாகுவீர்!

ஓம் தத் ஸத்

★★★★

இனி பாடல்களையும் அவற்றிற்குரிய தெளிவுரைகளையும் தருகின்றோம். கருத்தூன்றிப் படித்து

அறிக! உணர்க!! ஆகுக!!!

1. பெருமைமிகும் ரிக்வேத முடிவிலுள்ள

பிரக்ஞானம் பிரம்மம் என்னும் வாக்யம் ஒன்றாம்!

இருள்மருவா யஜூர்வேத முடிவிலுள்ள

இலங்கும் அகம் பிரம்மாஸ்மி வாக்யம் ஒன்றாம்!

மருண்மருவா சாமவேத முடிவிலுள்ள

மகத்தான தத்வமசி வாக்யம் ஒன்றாம்!

அரிய அதர்வண வேத முடிவிலுள்ள

அயம் ஆத்மா பிரம்மம் என்னும் வாக்யம் ஒன்றாம்!

(அத்.28; பா.2)

தெளிவுரை:-

கால-தேச-வர்த்தமானங்களைக் கடந்ததாயும், நாம-ரூப-குணம்-குறி அற்றதாயும் உள்ள அந்த ஸ்ரீ பரஸ்வரூபத்தை பெருமைப்படுத்தி, மிகைப்படுத்தி, விரிவுபடுத்தி, அழகுபடுத்தி விவரிக்கும் மிகப் பழமையான ரிக்வேதமானது, தன் கடைசிப் பகுதியிலுள்ள ''ஐதரேய உபநிஷதத்தில்''

''பிரக்ஞானம் பிரம்மம்''

என வீரத்துடன் முழங்கிவிட்டு மௌனமாகிவிட்டது.

காண்பதற்கு அறிவுக் கண்ணாயும், உணர்வதற்கு மெய்யுணர்வாயும், அடங்குதலில் மஹா மௌனமாயும் அமைந்த ஸ்ரீ பரஸ்வரூபத்தை அஞ்ஞான இருள் இல்லாத் தன்மையினால் நவரத்தினம் போன்று மிகவும் தெளிவான முறையில்

''அஹம் பிரம்மாஸ்மி''

என தனது கடைசிப் பகுதியிலுள்ள ''ப்ருஹதாரண்யக உபநிஷதத்தில்'' வீர முரசு முழங்கிவிட்டு மௌனமாகி விடுகின்றது யஜூர் வேதம்.

மனம் அற்று, பொருள் அற்று, செயல் அற்று இன்னது என உணரும் நிலையற்ற அந்த ஸ்ரீபர சொரூபத்தை ஸ்ரீ சத்குரு மூலமாக பக்குவம் அடைந்த சீடனுக்கு சுட்டிக் காட்டும் நிமித்தம்

''தத் த்வம் அஸி''

என மருட்சியற்ற சாம வேதத்தின் கடைசியில் உள்ள சாந்தோக்ய உபநிஷதத்தில் தைரியமாக முழங்கிவிட்டு மௌனமாகி விடுகிறது.

ஸ்ரீ சத்குரு உணர்த்த சத்சிஷ்யன் உணர்ந்து, தாம் தாமான நிலைபெற்று எந்த முயற்சியோ, பயிற்சியோ, சாதனையோ இல்லாமல் சகஜமாகவே **''நாம் அதுவே''** என்ற பிரம்ம பாவனையில், குரு - சிஷ்ய பேதமும் அற்ற நிலையில் அந்த ஸ்ரீபர சொரூபத்தை

''அயம் ஆத்மா பிரம்மம்''

என வீரகோஷம் புரிகிறது, மிக அருமையான அதர்வண வேதத்தின் கடைசியில் உள்ள மாண்டூக்ய உபநிஷதம். அத்துடன் அதுவும் மௌனமாகிவிடுகிறது.

2. ஞானமதே பிரக்ஞானம் என்னலாகும்

ஞானத்தால் சகலமுமே தெரிவதாகும்

ஞானமதில் தெரிகின்ற ஜகத்தனைத்தும்

ஞானத்தில் கற்பிதமாய் தெரிவதாலே

ஞானமலது அந்நியமாய் ஒன்றும் இல்லை

ஞாலம் முதல் எப்பொருளும் ஞான மாத்திரம்

ஞானமதே நமது நிஜ வடிவமாகும்

ஞானமதே பரப்பிரம்ம வடிவமாமே!

(அக்.28; பா.4)

தெளிவுரை:-

ஞானம் என்றால் வித்தை! வித்தை என்றால் அறிவு! அறிவு என்றால் சித் சொரூபம்! சித் சொரூபம் என்றால் நமது ஆத்மா! பிரக்ஞை என்றால் உணர்வு!

மாயையை தம் வசம் கொண்ட ஈசனால் உண்டாக்கப்பட்ட இயற்கையானது ஜட சொரூபமாகும். தன் மனதிலுள்ள எண்ணங்கள் என்னும் வலையால் சிக்குண்டு பந்தப்பட்டு பிரக்ஞையற்று கிடப்பவன் இந்த ஜீவனாவான்! அறிவற்ற மூட ஜடமாகிய இவ் உலகம் ஜீவனுடைய கற்பனையால் நித்தியமாய் இருப்பதைப் போலும், அசைவதைப்போலும், இன்பதுன்பங்களை கொடுப்பதைப் போலும், அதனால்தான் சுக - துக்கங்களை அனுபவிப்பதைப் போலும் ஓர் மனோமய பிரமையை உண்டு பண்ணுகின்றான்! இதுவே அவஸ்தாத்ரய பிரக்ஞையாகும். இந்த "அவஸ்தாத்ரயத்தினால்" கனவில் கானல் நீரை உண்டு தாக சாந்தி செய்து மகிழ்வடையும் மனிதனைப்போல் மனதால் உண்டு களிப்பதால், உடல் மேல் உள்ள பிரிய வாசனையால்

''மது உண்ட வண்டு போல'' உடல் இன்ப துன்ப உணர்ச்சிகளுக்கு அடிமையாகி தான் இன்னான் (ஆத்மஸ்வரூபம்) என்ற பிரக்ஞையற்று தாம் ஜீவன்என்ற சரீர அபிமான அஹங்கார பிரக்ஞையோடு இருக்கிறான்.

இனி பாடலுக்கு வருவோம்!

அறிவு சொரூபமான ஆத்மாவே நாம் என **''திடப்பிரக்ஞை''**யோடு இருந்தால் அங்கு உலகமோ அதன் மோகமான வஸ்துக்களோ தோற்றாது (ஜகத் அனைத்தும் நம் சிருஷ்டியாகவே தோற்றும், நம் சிருஷ்டியில் நமக்கு மோகம் உண்டாகாது) நாம் அறிவு (ஆத்ம) ஸ்வரூபமாகவும் ஜகத் நம்முடையதாகவும் (அஹம் பிரம்மம் ஜகம் பிரம்மம்) தோற்றும் போது நமக்கு அன்னியமாக எதுவும் இல்லை! இங்கு பிரக்ஞை என்ற சொல்லும் உணர்வு, அறிவில் அடங்கி விடுவதால் இருப்பது ஒன்றே, அது நலமே, அது சுகமே, அது நாமே என சுக சொரூபமாவாய்! அது நாம்என்ற பேருணர்வே உன் நிஜ சொரூபமாகும்!

3. பிரக்ஞானம் பொருள்தானே பிரம்மமாகும்
பிரம்மம் என்னும் பொருள்தானே பிரக்ஞானம் காண்!
அக்ஞானம் முதலியதாம் உபாதியாலே
அகண்டபரம் பொருள்தானே இரண்டு போலாம்!
பிரக்ஞானம் பிரம்மம் என்னும் வாக்கியார்த்தம்
பிரங்கியதால் உபாதி எல்லாம் நீங்கும் போது
விஞ்ஞான கனமான வஸ்து ஒன்றே
வேறற்ற அகண்டார்த்தமாகி நிற்கும்!

(அத்.28; பா.6)

பொருள்:-

உடல் உலக பொருட்களின் எண்ணத்தை விட்ட நிலையே ஆத்மப் பிரக்ஞையின் (உணர்வின்) பொருள்தான் பிரம்ம நிலையாகும்! பிரம்மப் பிரக்ஞையோடு (உணர்வோடு) சர்வ சதாவும் பொருந்தி இருத்தலே பிரம்ம ஞானமாகும்! கவனக் குறைவினால் (பேத பார்வையினால்) சிப்பியில் வெள்ளி தோற்றுவதும், கல்லில் நாய் தோற்றுவதும், ஒன்று தோற்றினால் ஒன்று தோற்றாது, ஒன்றை மற்றொன்றாக வேறுபடுத்தி பார்த்து ஒன்றில் இரண்டை காண்பது போல, இருக்கின்ற ஸ்ரீ பரசொரூபத்தில் இல்லாத உலக வஸ்துக்களை தம் மனோ வடிவ எண்ணத்தில் ஓடவிட்டு குணதோஷங்களை சிருஷ்டித்துக் கொள்கிறோம்! அப்புறம் இக்குண தோஷங்களை விடமுடியாமல் தவிக்கின்றோம்! உடல் உலக மாற்ற தோற்றத்தில் ஏமாறாமல் அனைத்தும் அந்த ஒன்றே, அது நாமே என்ற நிலையில் உபாதி பேதம் நீங்கும் போது ஞான ஸ்வரூபமான அந்த ஒன்றே அகண்டார்த்தமாக (அண்டபிண்ட சராசரங்களிலும் தாமான நிலையில்) அகண்டைகரஸமாக (நிஸ்தரங்க சமுத்திரத்தைப் போல) எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணானந்தமாக அமைந்து விடும்!

4. பிரிவுற்ற உபாதியுறும் ஜீவன்தானே

பிரக்ஞான பதத்தினுடைய வாக்கியார்த்தம்!

விரிவுற்ற உபாதியுறும் ஈசன்தானே

விளம்பியிடும் பிரம்மபத வாக்கியார்த்தம்!

ஓர்மித்த நிருபாதி வஸ்துதானே

உபயவித பதத்திற்கு லட்சியார்த்தம்!

தெரிவித்த உபயபத லட்சிய ஐக்கியம்

நிகழும் மஹாவாக்கினுடைய அகண்டார்த்தம் காண்!

(அத்.28; பா.7)

பொருள்:-

ஈசனும் ஜீவனும் ஒன்றே! மண்மய சிருஷ்டி மஹேசன் சிருஷ்டி, மனோமய சிருஷ்டி ஜீவன் சிருஷ்டி! என்றது உபநிஷத்! அதாவது மண், மலை, மரம், செடி, கொடிகளை இயற்கையின் நிலையில் ஈசன் சிருஷ்டித்தான், அதே பொருளை தம் மனோமய (கற்பனை) வடிவமாக எண்ணங்களை விரித்து விரித்து தனக்குத் தேவையென, செயற்கை நிலையில் ஜீவன் சிருஷ்டி செய்தான். ஈசன் பார்த்துக் கொண்டிருக்கிறான்! ஜீவன் அதை புசித்துக் கொண்டிருக்கிறான்! இந்நிலையில் ஈசன் மொத்த வியாபாரி, ஜீவன் சம்சாரி! ஈசனும் கடை விரித்து வியாபாரம் விற்றே ஆகவேண்டும்! ஜீவனும் தம் புண்ணிய பாப வினைக்குத் தக்கபடி அவன் கடைச் சரக்கை வாங்கி புசித்தே தீர வேண்டும்!

இனி பாடலுக்கு போவோம்!

ஈசன் ஜகத்தை (கடையை) விரித்தான். அது மூலப் பொருளாக இருந்தது! அதாவது அது இயற்கையாக இருந்தது. அது

அப்படியே புசிக்க (அனுபவிக்க) முடியாது. ஆகவே ஜீவன் அதை எடுத்து தன் மன மடைமையால் **உடைமையாக்கிக் கொண்டு** அதை செயற்கையாக்கி தன் மன எண்ண குண தோஷங்களினால் புசித்தான்! ஆகவே ஈசனைவிட்டு பிரிந்த தன்மையினால், உலகை உண்டு களித்த தன்மையினால் ஈசனை ஜீவன் மறந்தான்! ஆனால் ஜீவர்களுக்காக உலகை கடை விரித்த தன்மையினால் வியாபாரி ஆன ஈசனும் ஜீவர்களையும் மறக்க முடியாது, வியாபாரத்தையும் துறக்க முடியாது! இதன் உண்மை என்னவென்றால் உலகை உண்ட நிலையில் ஜீவன் ஆனான்! உலகை கண்ட நிலையில் ஈசன் ஆனான்! இந்த ஜீவனும் **நான் எனது** என்ற அஹங்கார அபிமானத்தால் புசிக்கும் புசிப்பை நிறுத்திவிட்டால் ஜீவன் ஈசன் ஆக முடியும்! ஆனாலும் ஈசன் தம் **மாயா காரியத்தால்** கடையாகிய உலகை விட முடியும். ஜீவனும் புசிப்பை விட்டு, ஈசனும் தொழிலை விட்டு ஸ்ரீ பரசொரூபமாகிய அந்த ஒன்றின் நிலைக்கு வந்துவிட்டால் இரண்டும் ஒன்றே!

5. சந்ததம் நாம் பரப்பிரம்ம சொரூபமன்றி
சற்றேனும் சம்சாரி அல்ல வென்றே
இந்தவிதம் அறிவுற்று ஜலத்தில்சேர்ந்தங்கு
ஏகரஸமாய் நின்ற லவணம் போல
அந்தமிலா அகண்ட பரப்பிரம்மத்தின் கண்
ஐக்கியமே அடைந்த அந்த மனோவிருத்திதானே
மைந்தா! அகண்டாகார விருத்தி என்று ·
மாசற்ற அறிஞர்களால் மதிக்கலாகும்!

(அக்.28; பா.10)

பொருள்:-

எக்காலத்தும் நான் ஜீவன் என்றும், அஞ்ஞானி என்றும், சம்சாரி என்றும், நான் மஹாபாபி என்றும், எனக்கும் கதி மோட்சம் கிடைக்குமா என்றும் **எண்ண விருத்திகளை** சிதறப் பண்ணி மனதை பாரம் ஆக்காமல், நாம் இறைவன் அம்சமே, நாம் ஆத்ம சொரூபமே, நாம் பிரம்ம சொரூபமே, நாம் ஆனந்த சொரூபமே, நாம் சுக சொரூபமே, என **சத்தியமான எண்ண விருத்திகளை** சர்வ சதாகாலமும் மனதில் தரித்துக் கொண்டிருந்தால் உடல் உலக எண்ண விருத்திகள் மறைந்து, தெய்வீக சத்வகுண எண்ண விருத்திகள் மேலோங்கி, **நாம் அது** என நிலைத்து நிற்கும் போது சத்வகுண எண்ண விருத்தியும் மறைந்து, நிர்க்குணமாய் மனம் மகத்தாய் (மனோ நாசமாய்) சுயமாக பிரகாசிப்பாய்! அதாவது சமுத்திரத்தில் தோன்றிய உப்பு பதுமை விண்ணளாவி வளர்ந்து நின்றாலும் சமுத்திரத்தைப் பார்த்து பேத பார்வையுடன் நீ வேறு நான் வேறு என என்னதான் முழங்கினாலும் அந்த உப்புப்பதுமை சமுத்திரத்தில் விழுந்த மாத்திரத்தில் சமுத்திர ஜலம் ஆகிவிடுவது போல உன் பேத புத்தியாகிய மனோவிருத்தி (எண்ணம்) ஒடுங்கி விட்டால் எல்லாம் ஒன்றே, அது சுகமே, அது அகண்டைக ரஸமே, அது யாமே, இது உறுதி!

6. தேகம் முதல் நான் எனல் துவைத விருத்தி

திகழ் சாட்சி நாம் எனல் சாட்சி விருத்தி

ஏகபரம் நாம் எனல் அகண்ட விருத்தி

இம்மூன்று விருத்திகளில் இரண்டைத் தள்ளி

ஆகும் அகண்டாகார விருத்தி தன்னை

அநவரதமும் ஆதரவாய் அப்யாசித்து

சோகமுறும் சித்த விகற்பங்கள் அனைத்தும் தீர்த்து

சொன்ன அகண்டாகார சொரூபமாவாய்!

(அக்.28; பா.15)

பொருள்:-

எண்பத்தி நான்கு லட்சம் ஜீவ கோடிகளின் சரீரமும் புண்ணிய பாப வினைக் கூடாகும்! அது **அவித்யா சொரூபம்!** ஜடத்தை மூடத்தை தம் எண்ணமாகிய மனக் கண்களால் கண்டு தனக்கு அந்நியமாய் இரண்டுபடுத்தி **குண தோஷங்களால்** பீடிக்கப்பட்டு இன்பதுன்பங்களை தனதாக பாவனை பண்ணி அனுபவிக்கும் **விஷயாதி மனோநிலை** துவைத விருத்தி! இந்த எண்பத்தி நான்கு லட்சம் ஜீவ கோடிகளையும் அவர்களின் கவனக் குறைவால், அறியாமையால், மனோமய கற்பனையினால், ஜடகடபடாதிகளை (மண், மலை, தூலசரீரங்கள், மரம், செடி, கொடி) வேறுபடுத்தி, விவகரித்து, புசியாமல் புசிக்கும் இந்த ஜீவர்களை கண்டுகளித்து தாம் உண்டு கழிக்காமல் மனோ ரூபம் இல்லாமல் அறிவு சொரூபமாக, விக்ரகங்களைப் போலும் பட ரூபங்களைப் போலும் சாட்சியாக பார்த்துக் கொண்டிருத்தல் சாட்சி விருத்தியாகும்! இவை சூட்சுமமாக இருப்பதால் தேவ தெய்வங்கள் என சொல்லப்படும்! முந்தைய தூல விருத்தி ஜீவ நிலை, இப்போதைய சாட்சி விருத்தி ஈசன்

நிலை! அடுத்து அகண்ட விருத்தியை கேளாய்! நாம, ரூப முக்குணத்தோடும் சுட்டிக் காட்டப்பட்ட குறியோடும் கூடிக்களிக்கும் ஜீவ கணங்களையும், அவர்கள் உண்ணாமல் உண்டு களிப்பதாக காணும் உலக வஸ்துக்களையும், சிலந்திப் பூச்சியைப் போல் மாயை என்னும் பசையை உண்டு பண்ணி அந்த மாயையை வைத்து தாம் பந்தப்படாமலும், பற்றப்படாமலும், பஞ்ச கிருத்தியங்களை (சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதனம், அனுக்ரஹம்) அறிவு சொரூபமாக இருந்து கொண்டு **ஒழுக்க நிலையில்** (சத்திய தர்மத்தில்) வாக்கிலும், செயலிலும் சூட்சுமமாக இருந்து ஆளுகை புரியும் பஞ்சகர்த்தாக்களையும் அவர்களின் காவல் தெய்வங்களையும் **சர்வ சாட்சியாக தற்போத நிலையில்** (நான் இருக்கிறேன்) ஸ்ரீ பரமாத்ம சொரூபமாக **சாட்சி சைதன்யமாக** இருப்பது அகண்ட விருத்தியாகும்!

இனி பாடலுக்கு வருவோம்!

மேலே கூறிய தூல விருத்தியையும் தள்ளி ஈசன் நிலையில் சாட்சியாக இருக்கப் பழக வேண்டும். இங்கு இருகுணம் போய் சத்வகுணம் ஒன்றே நிலவும். தெய்வ அனுக்கிரகத்தினாலும் ஸ்ரீ குரு கிருபையினாலும் தூல விருத்தியையும் தள்ளி, சாட்சி விருத்தியையும் தள்ளி, ஸ்ரீ பரமாத்ம சொரூபத்தில் குணாதீத நிலையில் (நிர்குணத்தில்) மனம் அற்ற நிலையில் மனம் அறிவான நிலையில் அந்த அறிவு **பேரறிவில்** நிலைத்திருக்கவும் (அகண்ட விருத்தியில் நிலைத்திருக்கவும்) பழக வேண்டும்! **இதன் அப்பியாசம் அனைத்தும் ஒன்றே, அது சுக சொரூபமே, அது ஆனந்தமே, அது நாமே என நிலைத்து நிற்கலாகும்! இங்கு சோகம், மோகம், பயம் இல்லை!**

7. முத்து அகம் பதத்திற்கு ஜீவனார்த்தம்
மொழி பிரம்ம பதத்திற்கு ஈசனார்த்தம்
அந்தமிலா ஜீவபர ஐக்கியம் தானே
அஸ்மி என்னும் பதத்தினுடைய அர்த்தமாகும்!
இந்தவிதம் இந்த மகா வாக்கியத்தின்
ஏக ரசமாயுள்ள அகண்டார்த்தத்தை
புத்தியினால் ஆய்ந்திதனை அனுபவித்து
புகன்ற அகண்டைகரச சொரூபமாவாய்!

(அத்.28; பா.17)

பொருள்:-

முத்து உருவாகும் விதம்:-

முத்து என்றால் அசுவினி நட்சத்திரம் கூடும் இரவு 12 மணி அளவில், நடு சமுத்திரத்தில் மழை பெய்வது மிக மிக கடினம். அன்று அப்படி பெய்தால் நடு சமுத்திரத்தில் இரு இதழ்களையும் விரித்தபடி மிதக்கும் சிப்பியானது அம்மழையின் ஓர் துளியை ஏற்றுக் கொண்டு தன்னை மூடிக் கொண்டு சமுத்திர அடி ஆழத்திலுள்ள பாறைகளில் சென்று ஒட்டிக் கொள்ளும். அதன் உள் உள்ள ஜீவ சக்தியான உயிர் அணு இறைவன் கிருபையினால் கிடைக்கும் சதைப் பற்றை உண்டு ஜீவித்து 12 ஆண்டுகளானால் அது விலை மதிப்பற்ற முத்து ஆக விளைகிறது. இது முத்துவின் கதை!

சத்சிஷ்யன் உருவாகும் நிலை :

இதைப் போல ஓர் சத்சிஷ்யன் ஓர் சத்குரு தேவரிடம் 12 ஆண்டுகள் முறைப்படி சேவை செய்து வந்தால் ஞான முத்தாக

அவன் விளைவான்! இங்கு குரு சிப்பியாகும். மழைத்துளி சிஷ்யனாகும். உயிர் அணு குரு உபதேசமாகும்! மாயா கார்யமாக உள்ளே இருக்கும் சதைப்பற்று ஈசனாகும்! குருவாலும், திருவாலும் பாதுகாக்கப்பட்ட ஓர் பக்குவ ஆன்மாவே சத் சிஷ்யனாக முடியும்! அவனே **நல்முத்து.** ஆகவே முத்து அகம் என (சிஷ்ய) ஜீவனுக்கு பெயரைக் கொடுத்தார்ஆசிரியர்!

இனி பாடலுக்கு வருவோம்!

முத்து போல் பாதுகாக்கப்பட வேண்டிய ஓர் பக்குவ ஆன்மா (அறியாமை என்னும் போர்வையால்) தம்மை மூடிக் கொண்ட தன்மையினால் ஜீவாத்மா ஆனான். இந்த போர்வையை நீக்கி விட்டால் இவனே ஆத்மா. இங்கு பிரம்மபதம் என்ற நிலையை குறிப்பது ஈசன் நிலையாகும்! இங்கு அஸ்மி என்னும் பதத்தைக் குறிப்பது ஸ்ரீ பரமாத்ம நிலையாகும், அதாவது ஸ்ரீ பரம்பொருள் நிலையாகும். இதை முறையாக சொன்னால் தூல விருத்தி என்றும், சாட்சி விருத்தி என்றும், அகண்ட விருத்தி என்றும் சொல்லலாம். அதாவது ஜீவ நிலை, ஈச நிலை, பரமாத்ம நிலை எனவும் சொல்லலாம். இங்கு ஜீவன் அவித்தையை விட்ட நிலையிலும், ஈசன் தம் மாயையை விட்ட நிலையிலும் இருவரும் ஒருவரே. ஏகரசமாக அகம்பிரம்மம் (நாம் ஆத்மாவே) என உறுதிப் பட்டுவிட்டால் அங்கு ஜீவனும் ஈசனும் இல்லாமல் ஸ்ரீ பரமாத்மாவே தனித்திருக்கும். இதை உன் அறிவு சொரூபத்தினால் உணர்ந்து **அது நீ** என ஆகுவாயாக!

8. பேதமுறும் உபாதியினால் கிஞ்சிக் ஞத்வம்
பிறங்கிய ஈசர் சர்வக் ஞத்வம் யாவும்
ஓதிய ஜீவ ஈஸ்வரர்களுடைய தர்மம் போல
உபாதியெல்லாம் விசாரித்து தள்ளும் காலை
ஆதியில்லா ஜீவபர ஐக்கியம் மிஞ்சும்!
அதுதானே அகண்டார்த்தமாம் அவற்றை
ஓதும் அஹம் பிரம்மாஸ்மி வாக்கியத்தால்
உணர்ந்தந்த அகண்டார்த்த வடிவே ஆவாய்!

(அக்.28; பா.18)

பொருள்:-

ஒன்றை மற்றொன்றாகவும் பலவாகவும் மாற்றி மாற்றி பார்த்து பார்த்து புசித்து புசித்து இந்த **ஏமாற்றத்தினால்** அவித்யா வாசனை ஏறி அந்த வஸ்து மோகத்தைவிட முடியாதபடி குணதோஷ பந்தத்தில் மூழ்கி இருக்கும் ஜீவனுக்கு **உலகபந்தம்** என சொல்லலாம். பெரிய தனவந்தனாகவும் சாமர்த்திய வியாபாரியாகவும் உள்ள ஈசனுக்கு தாம் பற்றப்படாமல், பிறரை பற்றப்படச் செய்யும் மாயா காரியத்தினால் **ஜீவர்களின் வினை** குணதோஷங்களுக்கு தக்கபடி தம் சிருஷ்டியின் வினோதத்தால் தாம் விவேகத்தில் இருந்து கொண்டு ஜீவர்களுக்கு தீராத மோகத்தை உண்டு பண்ணும் விளையாட்டை வைத்திருக்கும் ஈசனுக்கு இது தெய்வ பந்தமாகும். குழந்தைகளே! இவ்விருவரும் தம் உலக பந்தத்தையும், தெய்வ பந்தத்தையும் விட்ட நிலையில் ஒருவரே! இதைத்தான் அகம் பிரம்மாஸ்மி வாக்கியம் வலியுறுத்திக் கூறுகிறது. பேதங்களை விடுத்து அனைத்தும் அந்த ஒன்றே, அது சுக சொரூபமே, அது நாமே என ஆகுவாயாக!

9. மாயையினால் உபாதியுறும் ஈசன் தானே
மருவிய தற்பதம் உரைசெய் வாக்கியார்த்தம்!
மாயை தன் அவித்தையுறும் ஜீவன்தானே
அறைகின்ற த்வம்பதம் ஓர் வாக்கியார்த்தம்!
ஏகமதாய் உபாதியெல்லாம் இழந்த பின்னர்
ஏக இலக்கணமான வஸ்துதானே
தூயபதம் இரண்டிற்கும் லட்சியார்த்தம்!
தொடர்புற்ற ஐக்கிய அஸி பதார்த்தம்!

(அத்.28; பா.24)

பொருள்:-

சிலந்தி பூச்சியானது தம்மிடம் இருந்து பிசின் போன்ற ஓர் நூலை வைத்து வலை பின்னுகிறது. தேவை இல்லாத போது அந்த நூலை தாமே தமக்குள் ஈர்த்துக் கொள்கிறது! இதைப் போலவே ஈசனும் தம்முடைய மாயையினால் தாம் பந்தப்படாமல், பற்றப்படாமல் சாட்சி நிலையில் கண்காட்சியாகிய இந்த ஜகத்தை படைத்தான், தன் சிருஷ்டியை தான் பார்த்துக் கொண்டிருப்பானே தவிர அதை எடுத்துப் பார்ப்பதும் இல்லை, புசிப்பதும் இல்லை. ஒன்று பழையதாகவோ, பழுதாகவோ ஆகிவிட்டால் அதை மாற்றி நூதன வஸ்துவாக சிருஷ்டி செய்வான்! இது தமக்கல்லாமலும், பரோபகாரமாகவும் கருணையின் நிலையில் இருப்பதால் (காருண்யம் அல்ல) இந்த கிருத்தியமும் ஈசனுக்கு ஓர் உபாதையே! **தெய்வபந்தமே!** இதைப்போல பட்டு பூச்சியானது தன்னுள் இருந்து தோன்றும் ஓர் நூலை உண்டு பண்ணி அதை தன்மேலேயே திரும்ப திரும்ப, சுற்றி சுற்றி தன்னை அசைக்க முடியாமல் பிணைத்து, மீளவும் முடியாமல் **தம் நூலாலேயே** தாம் இறந்து விடுகிறது!

இத்தன்மை போல் இந்த ஜீவனானவன் அவித்தையான ஜடகட படாதிகளை, மூடவஸ்துக்களை ஈசனின் மாயையால் இருப்புடையதைப் போலும், அசைவதைப் போலும், இன்ப துன்பத்தைக் கொடுப்பதை போலும் தோற்றுவதால் அவற்றிற்கு தம் **மன எண்ணமே** மூலகாரணமாக இருப்பதால் **நான், என்னுடையது** என புசிப்பதால் அந்த புசிப்பை விட முடியாமல் அவதியுறும் ஜீவனுக்கு **உலகபந்தம்** ஓர் உபாதையே!

இனி பாடலுக்கு வருவோம்!

ஈச, ஜீவ, பரம் இவை மூன்றிற்கும் முறையே தற்பத லட்சியார்த்தம் என்றும், த்வம்பத லட்சியார்த்தம் என்றும், அசிபத லட்சியார்த்தம் என்றும் சொல்வதுண்டு! மேலே கூறியதை ஆராய்ந்து பார்க்கும் போது **மாயை** என்ற கர்த்ருத்வத்தினால் தற்பத உரையாக இருக்கும் ஈசனுக்கு உபாதை என்றும், போக்த்ருத்துவத்தினால் த்வம்பத உரையாக இருக்கும் ஜீவனுக்கு உபாதை என்றும் (ஈசன் அனைத்துக்கும் கர்த்தாவாக இருப்பதால் கர்த்ருத்வம் என்றும் ஜீவன் அனைத்து போக போக்கியங்களையும் **தம் மனதினால்** அனுபவிப்பதனால் போக்த்ருத்வம்! என்றும் அதாவது கர்த்தா, போக்தா என்றும் சொல்லலாம்! இவ்விருவருக்கும் இச்சொல் **வாக்யார்த்தமே** தவிர லட்சியார்த்தமல்ல. இவ்விருவரும் தம் உபாதையை விட்ட காலத்தில் அதாவது படைப்பையும், புசிப்பையும் விட்ட காலத்தில் இருவரும் ஒருவரே, அந்த ஒருவர் ஸ்தானமே அசிபத லட்சியார்த்தமாகும்! இதைத்தான் இந்த மகாவாக்கியம் கூறுகிறது தற்பத சொரூபமும் த்வம்பத சொரூபமும் தம் உபாதைகளை களைந்து ஐக்கியமாகிவிட்டால் அதுவே ஏக இலக்கணமான வஸ்துவாகிய அசிபதம் ஆகிவிடும்! இதுவே லட்சியம்! **அது நீ** ஆகுவாயாக என வாழ்த்துகிறோம்!

10. உத்தமதாம் குருவருளும் அகண்டார்த்தத்தை
உவகையுடன் உள்ளபடி கேட்ட பின்னர்
நிச்சலமாம் புத்தியினால் (அறிவினால்) நிச்சயித்து
நிருமலமாம் அகம் பிரம்ம மானோம் என்று
துச்சமிலா அனுபூதி அடைந்தவன் தான்
துகளற்ற **சத்சீடன்** மற்றோர் எல்லாம்
எச்செயலைச் செய்யினுமே சீடராகார்
ஏகபரம் அறிந்தவனே சீடனாவான்!

(அக்.28; பா.29)

பொருள்:-

உத்தமமான, சத்யமான, பரமார்த்த சொரூபமான, அகண்டார்த்தத்தை ஸ்ரீ சத்குரு வாயிலாக கேட்டுணர்ந்த மாணவன் சலன புத்தியை தவிர்த்து, உறுதியான அறிவினால் நிச்சயித்து ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலத்தையும் மூலத்தோடு கெடுத்து ஸ்ரீ குரு அருளிய "தத் த்வம் அஸி" என்ற ஸ்வய அனுபவ மகாவாக்கியத்தை கலக்கம் இல்லாத, களங்கம் இல்லாத, சந்தேகம் இல்லாத, தீட்சண்யமான புத்தியுடன் அனுபவித்து அதன் மயமானவனே உத்தம உயர் சீடனாவான்! இதை விடுத்து 63 கலைகளையும், அபூர்வ சக்திகளையும், அஷ்டமா சித்திகளையும் கற்றவன் உத்தம சீடனாக மாட்டான்!

11. சர்வ மகா மந்திரமும் உபதேசிப்போர்

சாமான்ய குருவெனவே சாற்றலாகும்!

இருமையில்லா பரப் பிரம்மம் நீயே யென்றிங்கு

இணையற்ற உபதேசம் செய்கின்றோனே

பெருமைமிகும் சத்குரு வென்றுரைக்கலாகும்

பின்வெகுவாய் பேசுவதால் பெறும் பேறென்ன?

அரியபரன் நீ என்போன் ஆசானாவான்!

அகம் பிரம்மம் என்றறிவோன் மாணானாவான்!

(அத்.28; பா.30)

பொருள்:-

நான்கு வேதங்களையும், வேதங்களின் இலக்கணங்களையும், பதினெட்டு புராணம், இரண்டு இதிகாசம், பிருதிகல்பம், கணித சாஸ்திரம், சகுண சாஸ்திரம், கால நிர்ணயம், தர்க்க சாஸ்திரம், நீதி சாஸ்திரம், நிருக்தம், சிக்ஷயாகிய வேத நூல், பூதவித்தை, போர்முறை, வான சாஸ்திரம், ஸர்ப்ப வித்தை, கந்தர்வ வித்தை, அஷ்டசித்திகள் இன்னமும் என்னென்ன உண்டோ இவை அனைத்தும் கற்றுணர்ந்த பெரியவரும் இவைகளை பிறருக்கு உபதேசிக்கக் கூடிய மகான்களும் **சத்குரு ஆகார், சாமான்ய குருவே** ஆவர்! தன்னை அறியும் அறிவை உணர்த்தியவரே சத்குரு ஆவார்! இந்த "தத் த்வம் அஸி" என்ற வாக்கியத்திற்கு ஓர் அரிய பொருள் அதாவது **தத்பதார்த்தத்தின்** சொரூபம் ஈசன், இவன் சக்ரவர்த்தி! இவன் ஆளுகையின் **பார்வையிலேயே** அனைத்து காரியங்களும் நடைபெறும். இந்த அரசனுக்குரிய லட்சணம் இரண்டு, ஒன்று மகுடம், மற்றொன்று செங்கோல்! மகுடம் ரூபலாவண்யம், அந்தஸ்து, வசீகரம், சௌந்தர்யம், படாடோபம், பதவி ஆகியவற்றை குறிக்கும்! அடுத்து

செங்கோல் இது நீதி, ஆற்றல், மகிமை, சிருஷ்டி, ஸ்திதி சம்ஹாரத்திற்குரிய (மாயா) சக்தி ஆகியவற்றை குறிக்கும். த்வம் பதார்த்தத்தின் சொரூபம் ஜீவன்! இவன் ஓர் படைஞன்! இவனிடம் தேசம் பாதுகாக்கும் திறனுக்காக பற்பல ஆயுதங்கள் உண்டு! தொழிலால் இருவரும் வேறுபட்டிருக்கின்றனர். இருவரும் தம் தொழிலை விட்ட நிலையில் சமமே, தொட்ட நிலையில் பேதமே! ஆகவே தற்பத ஈசனும், த்வம்பத ஜீவனும் விட்ட நிலையில் அஸிபதமாகிய பரமாத்வே. அதாவது ஸ்ரீ பரம் பொருளே! என பயமற்ற உறுதியுடன் கூறும் ஸ்ரீ சத்குருவே உண்மை குருவாகும். மற்றவர் சாமான்ய குரு எனப்படுவர்! இதை உணர்ந்தவனே சத்சிஷ்யனாவான்!

12. தூல உடல் சூட்சும தேகத்திலில்லை

தூல உடல் சூட்சும உடலிவ் விரண்டும்
மாயமாம் காரண தேகத்திலில்லை
இவை மூன்றும் துரியத்திலிலவே யில்லை!
கோல முறும் தேகம் எல்லாம் இலாமையாலும்
கூறுபடா சின்மாத்ர சொரூபம் ஒன்றே
காலமொரு மூன்றிலுமே இருப்பதாலும்
களங்கமிலா சின்மாத்ர சொரூபமே நாம்!

(அக்.28; பா.35)

பொருள்:-

பஞ்சீகிருதம் பண்ணப்பட்டதாயும் புண்ணிய பாப கணக்கை ஒழுங்காக பார்த்து ஜாக்ரதாவஸ்தையில் (விழிப்பு நிலையில்) அனுபவிக்கும் இந்த தூல சரீரம் சொப்பனாவஸ்தையில் சஞ்சாரம் பண்ணப்படுவதில்லை! அதேபோல் கனவு நிலையில் சஞ்சாரம் செய்யும் மனோவடிவ சூட்சும சரீரம் விழிப்பு நிலையில் சஞ்சாரம் செய்வதில்லை! ஆழ்ந்த உறக்கத்தில் இந்த தூல சரீரமும் சூட்சும சரீரமும் அங்கு வருவதில்லை! அங்கு காரண சரீரமே உண்டு! அதாவது **நான் இருக்கிறேன்** என்ற தற்போதம் ஒன்றே இருக்கிறது! துரியத்தில் அதாவது தற்போதமும் கழன்ற சுத்தத்தில் அறிபவனும் இல்லை! அறியும் பொருளும் இல்லை! அறிவும் இல்லை! இல்லை என்ற தில்லையில் இல்லை என்பதும் இல்லையே என்பது சுத்தம்!

''உண்டு ஆனால் சொல்வதற்கில்லை'' வரை படத்தில் தோன்றும் கோலம் போல தோன்றி இருந்து மறையும் தூல

சூட்சும சரீரங்களை இல்லையெனவே நியதி பண்ணி தள்ளி குறித்துக் கூறுவதற்கு இயலாத, ஆனால் முக்காலத்திலும் தாம் தாமாக இருக்கும் தம்மை உள்ளபடி தத் த்வம் அஸி (அது நீயாக உள்ளாய்) என உணர்த்தும் காரண குருவான ஸ்ரீ சத்குருவை மறக்கலாகாது, **அதுவே நாம்** என்பதையும் மறக்கலாகாது.

13. ஓதியவா றுண்மையினை உபயம் காலை

உபாதியில்லா எமது நிஜ சொரூபத்திற்கும்

பேதமில்லா பரப்பிரம்ம சொரூபத்திற்கும்

பேசும் இலக்கணம் ஒன்றாயிருப்பதாலே

ஆதியில்லா அகண்ட பரவடிவே நாம் என்று

அனவரதமும் ஆய்வதுவே மனனயுக்தி!

மாதவனே! இவ்விதமாய் மயக்கம் தீர

மனனத்தின் சாதகமாம் யுக்தி சொன்னோம்!

(அக்.28; பா.42)

பொருள்:-

ஸ்ரீ சத்குரு இவ்வுண்மையை ஓதும்போது ஈச, ஜீவபேதம் எதனால் உண்டாயிற்றென்றும், அது எப்படி நீங்கும் என்றும் சொன்னார்! நிறை கர்ப்பிணி புலி ஒன்று ஓர் ஆட்டு மந்தையில் புகும் போது விதி (வினை) வசத்தால் தம் குட்டியை அந்த ஆட்டு மந்தையில் ஈன்று விட்டு சென்றுவிட்டது! விதி வசத்தால் ஆட்டு மந்தையில் சேர்ந்த புலிக் குட்டியும் **சகவாச தோஷத்தால்** தாம் புலி என்பதை மறந்து ஓர் ஆட்டுக் குட்டியாக எண்ணிக் கொண்டது. தம் சகாக்கள் ''ம்மே ம்மே!'' என கத்துவது போல கத்திக் கொண்டே இருந்தது. தம் இனம் பிளிருடுவது போல் பிளிற அதாவது கர்ஜிக்கத் தெரியவில்லை, தம் இனம் போல் மாமிசம் தின்ன முடியவில்லை, தம் சகாக்களுடன் பழக்க தோஷத்தால் புல் தின்ன ஆரம்பித்தது. தம்மை ஓர் ஆடாகவே பாவனை பண்ண முடிந்ததே தவிர புலி என்ற எண்ணம் கிஞ்சித்தும் இல்லாமல் போய்விட்டது! தெய்வாதீனமாக வேறொரு வேங்கை இந்த ஆட்டு மந்தையைப் பார்த்து ஓர் ஆட்டுக் குட்டியை தூக்க முயன்றது. **வினை**

முடிந்த தன்மையால் இந்த புலிக்குட்டியை அந்த புலி கண்டது! அடடா இது என்ன கொடுமை! **நம் இனம்** ஒன்று இப்படி இங்கே வந்து இந்தக் கூட்டத்தில் மாட்டிக் கொண்டதே. என எண்ணி ஒரே பாய்ச்சலாக பாய்ந்து அந்த புலிக்குட்டியை தூக்கிச் சென்றுவிட்டது! இது புலிக்குட்டியாக இருந்தாலும் **தன்னை அறியாத் தன்மையால்** தம்மை ஓர் ஆடாக மதித்து ஐயோ! புலி என்னை தூக்கிக் கொண்டு போகிறதே! ஆடாகிய என்னை கோரமான புலியாகிய இந்த மிருகம் அடித்து சாப்பிடப் போகிறதே! என் விதி இப்படியா முடிய வேண்டும் என அலறி அழுது ''ம்மே ம்மே'' என கத்தியது! கவ்விச் சென்ற பெரிய புலியானது இந்த புலிக்குட்டியை ஓர் இடத்தில் நிறுத்தி குழந்தாய்! நீ ஏன் இப்படி ஆட்டைப் போல் ''ம்மே ம்மே'' என கத்துகிறாய், என்னைப் போல் கர்ஜிக்க வேண்டும்! நீ புல் தின்னாதே, என் போல் மாமிசம்தான் உண்ண வேண்டும்! உனக்கென ஓர் ஆட்டை அடித்து தருகிறேன் பார், அதை நீ உண்ண வேண்டும் என்றது. ஆனால் இந்த புலிக்குட்டி தம் அறியாமை நீங்காததால் நீ புலிதான். நான் ஆட்டுக் குட்டி தான்! என்னை நீ அடித்து தின்னப் போகிறாய் என் கதை முடிந்து விட்டது என குய்யோ முறையோ என ''ம்மே ம்மே'' என கதறி அழுதது. அந்த புலி உண்மையை அதற்கு உணர்த்தும் பொருட்டு ஓர் நீர்தடாகத்திற்கு அந்த புலிக் குட்டியை தூக்கிச் சென்று, குழந்தாய்! இந்த ஜலத்தில் என்னையும் உன்னையும் பார்த்து தெளிவு பெறுவாயாக! தம்மையும் தம் தந்தையையும் ஜலத்தில் ஸ்வரூபிகளாக துவைதமாக தோற்றினாலும் தூலத்தில் இரண்டே, உண்மை உணர்வில் ஒன்றே! என உணர்ந்த தன்மைபோல் தூலத்தால் (வினையால்) ஆட்டுக் குட்டி என

தோற்றம் இருந்தாலும் வினையை கெடுக்கும் வாக்கியார்த்தத்தை நீ ஆடு (ஜீவன்) அல்ல! புல்லை (உலகை) உண்ணாதே (**நான், எனது** என புசிக்காதே) ''ம்மே ம்மே'' என கத்தாதே (உடல் உலக வார்த்தைகளை பேசாதே) எம்மைப்போல் கர்ஜனை செய். (**நாம் அதுவே** என்ற உணர்வுடன்) கர்ஜனையால் நாம் ஆடு என்ற குணமும், புல் தின்னும் எண்ணமும், அதனால் விளைந்த **ஜீவ உபாதையும்** உன்னை விட்டு அகலும்! பிரம்மப் பிரக்ஞையினால், ஆத்மப் பிரக்ஞையினால் (பிரக்ஞானம் பிரம்மம் என்ற அனுபவத்தினால்) உடல் உலக வாதனைகள் மறைந்து பிரம்ம நிஷ்டனாய் அனைத்திலும் உன்னைக் காண ஆரம்பித்தால் அஹம் பிரம்மாஸ்மி என்ற அனுபவத்தினால் அகம் பிரம்மம் ஜகம் பிரம்மம் என்ற ஈசன் நிலையும் பெற்று விடுவாய்! சர்வபூதாத்மனாய், சர்வ சாட்சியாய் உன்னைக் கவனித்து வரும் அந்த ஒன்றே (ஸ்ரீ பரம் பொருளே) ஸ்ரீசத் குருவாக இருப்பதால் அதுகாலம் கடந்திருந்தாலும் உன் காலத்தை அனுசரித்து ஒரு கால் **''தத் த்வம் அஸி''** என அருளி தமக்குள் ஐக்கியப்படுத்தும்! அவித்யா உபாதியாகிய ஜீவ ஸ்வரூபமும், மாயா உபாதியாகிய ஈச ஸ்வரூபமும் **வினையாலும், மனதாலும்** தோன்றியதே என உணர்வு பூர்வமாக உணர்ந்து **உதறிவிட்டால்** மீதி இருப்பது பிரம்ம ஸ்வரூபமே! அது அகண்ட ஸ்வரூபமே! அது நாமே என உறுதி கொள்!

14. (வி)சித்திரமாய் உபாதியுறும் ஜீவன் தானே
செப்பும் அயம் பதத்திற்கு வாக்கியார்த்தம்!
விஸ்தாரமாய் உபாதியுறும் ஈசன்தானே
விளம்பியிடும் ஆன்ம பத வாக்கியார்த்தம்!
சுத்தமதாம் ஜீவபர சொரூபம் தானே
சொல்லிய இவ்வுபயபத லட்சியார்த்தம்!
அத்திரமாம் உபயபத லட்சியத்தின்
ஐக்கியமே பிரம்மம் என்னும் பதத்தின் அர்த்தம்!

(அத்.28; பா.50)

பொருள்:-

இது உத்தம சிஷ்யனின் சுய அனுபவமாகும்! விஸ்தாரமாக உலகை படைத்து, இயற்கையின் நிலையில் மண் மலைகளையும், மரம் செடி கொடிகளையும், ஜக சிருஷ்டியாக்கி அந்த குணாதீத வஸ்துவானது ஓர் **சத்வகுணத்தை** மட்டும் தாங்கிக் கொண்டு, தம்முடைய சிருஷ்டியை கடை விரித்தது போல் பரப்பி, மாயையை தம் வசம் கொண்ட தன்மையினால், **சூட்சுமத்தால்** ஐந்தொழிலையும் புரிபவனைப் போல், ஓர் மாயா வேஷதாரியைப் போல் இருப்பதால் ஈசன் என்றும், கடை பரப்பியதால் மொத்த வியாபாரி என்றும், அனைத்திற்கும் அதிபதியாக இருப்பதால் பெரிய தனவந்தனென்றும், இந்த உபாதையே இவனுக்கு ஓர் தெய்வீக பந்தம் என்றும் சொல்லலாம்!

எண்ணத்தால் (மனதால்) தம்மைத் தாமே சுற்றிக் கொண்டு பட்டுபூச்சி போன்ற இந்த ஜீவனானவன் ஈசனே! ஆனால் தம்மைத் தாமே பிணைத்துக் கொண்டதால் ஜீவன் ஆனான்!

இந்த ஜீவனானவன் ஓர் சில்லரை வியாபாரியே! ஈசன் கடையிலிருந்து மண்ணையும், மலையையும் கொஞ்சம் எடுத்தான். வீட்டையும் பாத்திர பண்டங்களையும் தம் மனதில் **சூட்சுமமாக உருவகப்படுத்தி** அதை வெளியில் தூலமாக சிருஷ்டித்தான்! இப்படி தேவைக்குத் தகுந்த ஆசைகளையும், ஆசைக்குத் தகுந்த தேவைகளையும் மாறி மாறி உண்டு பண்ணி தம் மனோ பாவனையினால் பெருத்த சம்சாரி ஆனான்! சிருஷ்டிகளை பார்த்துப் பார்த்து தேவைகளை எடுத்ததனால் (வாங்கியனதால்) **வியாபாரி** (புண்ணிய பாப பற்று வரவு) என தொடர்பு கொண்டான்! அவைகளை நான், எனது என புசித்து, விட முடியாத விஷயானுபவ குணத்தில் சிக்கிக் கொண்டதால் **சம்சாரி** ஆனான்! **முந்தயது வினை, பிந்தயது மனம்!** இந்த இரண்டும் ஜீவனின் **சொந்தம் பந்தம்** எனப்படும்! இந்த இரண்டினாலும் ஈசனுக்கு (மாயைக்கு) இந்த ஜீவன் கடன் பட்டுவிட்டான்! ஆகவே நான் வியாபாரியும் அல்ல, சம்சாரியும் அல்ல என வினையையும் மனதையும் எங்கு வாங்கினாயோ அங்கு விட வேண்டியதே உன் கடமை. இந்த எண்ண உபாதையே ஜீவனுக்கு உலக பந்தம் என சொல்லலாம்! அதாவது அந்த பெரிய வியாபாரியிடம் (ஈசனிடம், மாயையிடம்) வினை மூட்டையை வாங்கியதால் இந்த புண்ணிய பாப கணக்கை லாப நஷ்டத்தை பார்க்காமல் (போக்கு வரவை கவனிக்காமல்) அப்படியே "அய்யா! இந்தா உன் சரக்கு" என அவனிடம் ஒப்படைத்து விட்டு உன் கடையை மூடிவிடு (நான் எனதை விட்டுவிடு). அவன் கடையை மூட உனக்கு அதிகாரம் இல்லை! அதை வாங்கத்தான் சக ஜீவர்கள் இருக்கிறார்களே!!! இப்போது நீ சில்லரை வியாபாரி அல்ல! இதனால் வினை முடியும். உடலையும், உறவையும் பாதுகாக்கும்

எண்ணத்தினால் நாளை என் செய்வோம்? நம் மனைவி மக்களுக்கு வேண்டுமே! ஊர் நினைக்குமே! இப்படியும் நடக்குமா? நாம் சாதனை செய்கிறோம், பக்தி பண்ணுகிறோம் இந்த பகவான் இப்படி நடத்திவிட்டானே? இப்படி நடத்தினால் நலமாக இருக்குமே? என இப்படி கோடான கோடி எண்ணங்களால் மனதால் பந்தப்படுத்தி அதனால் பிணைக்கப்பட்ட நீ ஓர் சம்சாரியே! இதையும் மூலத்தோடு கெடுத்து **''எல்லாம் நீ''** என அவன் பொறுப்பில் விட்டுவிட்டால் ''அவன் பார்த்துக் கொள்வான்'' அதாவது மாயை கவனித்துக் கொள்ளும்! மனதால் ஏற்பட்ட இந்த உபாதையை இந்த ஜீவன் விட்டுவிட்டால் இவன் ஜீவனும் அல்ல, சிறிய வியாபாரியும் அல்ல, சம்சாரியும் அல்ல! ஆத்மாவே! மாயையால் ஏற்பட்ட பந்தத்தை ஈசன் சர்வ சாதாரணமாக விட்டுவிடலாம். அவன் அதை விட்ட நிலையில் அவன் பெரிய தனவந்தனும் அல்ல பெரிய வியாபாரியும் அல்ல! **பரமாத்மாவே!** இவ்விருவரும் தம் பேத உபாதையை நீக்குங்கால் இரண்டும் ஒன்றே, அது அந்த காலாதீத ஒன்றே, அது சுக சொரூபமே, **அது நாமே!** இது சிஷ்யனின் சுய அனுபவ நிலையாகும்! ஆகவே **''அயம் ஆத்மா பிரம்மம்''** என நான்காவது அதர்வண வேதம் முறையிட்டு ஒய்கிறது!

15. சுயமதுவாம் ''தத் த்வம் அஸி'' என்னும் வாக்கியம்
சொல்லும் உபதேச மகாவாக்கியமாகும்!
இயலும் ''அஹம் பிரம்மாஸ்மி'' என்னும் வாக்கியம்
இலங்கும் அனுபூதி மஹா வாக்கியமாகும்!
மயன்மருவா ''பிரக்ஞானம் பிரம்ம'' வாக்கியம்
மனனத்தின் அப்யாச வாக்கியமாகும்!
அயமாத்மா பிரம்மமென்றறையும் வாக்கியம்
மறைகளுக்கெல்லாம் சம்மதமாம் வாக்கியமாமே!

(அக்.28; பா.55)

பொருள்:-

அப்பியாசம் செய்ய செய்ய **அனுபவம்** கூடும், அனுபவம் கூடும் போது ஸ்ரீ சத்குரு அருளும் **உபதேசம்** பலிதமாகும். (உபதேசம் என்றால் உன்னை நெருங்கி செல்லுதல் அதாவது ஸத்தின் சமீபம் இட்டுச் செல்லுதல்) உபதேசம் பலிதமாகும் போது முயற்சி பயிற்சி இல்லாமல் **சகஜானந்த நிலை** பெறுவதாகும்! இங்கு மறைக்கும் பொருளும் இல்லை, அதை உணர்த்தும் பொருளும் இல்லை. ஆகவே **சமமதுவே!** அபேதநிலையே! இரண்டற்ற நிலையே! ஒன்றே! ஆகவே இது வேத வேதாந்தங்களுக்கு **சம்மதமே** என்றார். இதை சற்று விளக்குவதாக இருந்தால் ஓர் பக்குவப்படும் ஆன்மா கர்மாவை நிஷ்காமியமாக பண்ணுகிறது. அதனால் அங்கு பக்தி தோன்றுகிறது! பக்தி நிலையில் ஒரு பொருளிடம் (இறைவனிடம்) **''எல்லாம் நீ''** என சர்வசங்கபரித்தியாகமாக **சர்வார்ப்பணம்** தோன்றுகிறது. நிஷ்காமிய கர்மாவும் (கர்மாவில் பிடிப்பற்ற தன்மையும்) சர்வார்ப்பணமும் (மனதினால் சர்வமும்

இறைவனுக்கே விட்ட நிலையில்) இணையும் போது இந்த சாதனை வளர வளர கர்மாவில் தோன்றும் வினையும் பரிபாகப்படும்! ஆசையில் தோன்றும் மனோவாசனையும் அதாவது மனோ குண தோஷங்களும் பரிபாகப்படும்! இந்த இரண்டுமே உடல் உலகமாக இருப்பதால் இவை உன் சாதனையால் நசிப்பதால் **உடல் உலக பிரக்ஞை இறக்கிறது.** உடல் உலக பிரக்ஞை இறந்தால் அங்கு மிஞ்சுவது தெய்வமே! அந்த தெய்வத்தை ஸ்ரீ சத்குரு வாயிலாக நாம் என உணரும் போது தெய்வம் ஆத்மாவாகிறது! அது நமக்குள் இருக்கும் சைதன்யம் ஆகிறது. உலகின் நிலையில் தெய்வம் என்றும் உண்மையின் நிலையில் ஆத்மா என்றும் உணரும் போது ஆத்மப் பிரக்ஞையே நம்மிடம் மிஞ்சும்! இதையே ஸ்ரீ சத்குரு வாயிலாக பிரம்மப் பிரக்ஞையாக (ஆத்மாவும் பிரம்மமும் வேறல்ல! ஆத்மா துளி, பிரம்மம் சமுத்திரம்) மாறுவதால் "பிரக்ஞானம் பிரம்மம்" என உறுதியாகிறது! நம் முன் காணும் தெய்வத்தை, நாம் பூஜித்து வழிபடும் தெய்வத்தை, தமக்குள்ளாக உணரும் நிலை பெற வேண்டும்! இது உடல் உலகை பிரக்ஞையிலிருந்து விடுபட்டால் தாமே சித்திக்கும்! தம்மை தெய்வமாகவும், ஆத்மாகவாகவும் உணரும் நிலை பெற்று விட்டால் அனைத்து ஜீவ ஸ்வரூபங்களும் ஆத்மாவே என்றாகிவிடும். ஆகவே அகம் பிரம்மம் ஜகம்பிரம்மம் என்ற நிலைபெற **நாம ரூப குணதோஷங்கள்** அழிய வேண்டும். இவை அழிந்து விட்டால் ஏதும் அற்ற தன்மையினால் தாம்தாமாக சுகித்திருக்கலாம்! இப்படிப்பட்ட சுத்தாத்மாவை தேவர்களாலும் குறைவுபடுத்த முடியாது! காரணம் இவன் அவர்களுக்கும் ஆத்மா ஆகிவிடுகிறான். அந்த அகம் பிரம்மாஸ்மியும் (அகம் பிரம்மம் ஜகம் பிரம்ம நிலையும்)

பிரக்ஞானம் பிரம்மமும் (இதனால் உலக பிரக்ஞை கெட்டு ஆத்மப் பிரக்ஞை நிலை பெற்று விட்டால்) இந்த பக்குவ நிலையை அறிந்த ஸ்ரீ குருதேவர் "தத் த்வம் அஸி", என்ற மகாவாக்கியத்தை எடுத்துக் கொடுக்கிறார். இங்கு பேதம் அற்று அபேத நிலை ஆனவுடன் **அதுவே நீ** என உறுதிப்படுத்தி விடுகிறார். இந்த க்ஷணம் அந்த சிஷ்யன் தன்னையும் தனித்துப் பார்க்க முடிவதில்லை, ஸ்ரீ குருதேவரையும் தனக்கு முன்பாக தனியாக காண முடியாத நிலையில் **அந்த ஒன்றாக** உணர்வதால் **"அயமாத்மா பிரம்மம்"** என்ற சுயமாக சகஜ நிலையில் எந்த முயற்சியும் பயிற்சியும் இல்லாத ஆனந்த **சுகசொரூபமாக** ஆகிவிடுகிறான்.

16. எப்போதும் இயல்பான மௌனமாகி
எவருடனும் கூடாமல் ஏகாந்தத்தில்
கற்போல அசையாமல் இருந்து சற்றும்
கலங்காத மனதுடனே ஓர்மையாகி
சற்போத சுககனமாம் பரம் நாம் என்றே
சந்ததமும் பாவித்து சாந்தனாகி
தற்போத சூனியனாய் விகற்பம் தீர்த்து
தற்பதமே தாமாகி முக்தனாவாய்!

(அத்.20; பா.33)

பொருள்:-

குழந்தைகளே! இயல்பான மௌனம் என்றால் அதிஷ்டானத்தில் ஆரோபத்தை காணாமலும், உலக வஸ்துக்களையோ, ஜீவர்களையோ கண்டாலும், சப்த்தார்த்தங்களை கேட்டாலும், என்ன நடக்கிறது? ஏன் நடக்கிறது? இவை யாருக்கு என எந்தவித கேள்வியும் பதிலும் **எண்ண வடிவில் உள்ளத்தில் எழா வண்ணம், சாட்சி சைதன்யமாய்** சும்மா இருப்பதுவே இயல்பான மௌனம்! ஆரம்பத்தில் தன்னை அறியும் அறிவை விசாரணை செய்யும் ஸத்யத்தை எடுத்து, அசத்தை தள்ள சத்சங்கத்தில் **அனுபவம் கூடும்** பரியந்தம் கூடி இருக்கலாம். பின் அதையும் தவிர்க்க வேண்டும். இங்கு ஏகாந்தம் எனக் கூறியது மனம் சலனம் இல்லாமல் அமைதியாக இருப்பதை குறிப்பிடுகிறது. மனம் அசைவு அற்று இருக்கப் பழகினால் தூலம் புதிய கணக்கை தொடராமல் பழைய கணக்கை மட்டும் முடித்து அதுவும் அசைவு அற்றிருக்கும் நிலை பெற்றுவிடும்! இரண்டு இருந்தால் கலக்கமும் கலகமும் அதனால் களங்கமும் ஏற்படும். ஒன்றென்றால் எடுக்கவோ, கொடுக்கவோ, சொல்லவோ,

கேட்கவோ எதுவும் இராதாகையினால் ''மௌனம் கலக நாஸ்தி'' என்ற நிலையில் அமைதியும் ஆனந்தமும்தான் இருக்குமே தவிர வேறு **குண தோஷத்திற்கு** அங்கு இடம் இல்லை. அந்த சத்சொரூபமாகிய **பரம் நாம்** என எந்த வினாடியும் பாவனா ரூபமாக இருந்தால் **''யத்பாவம் தத்பவதி''** என்றபடி பாவனா சொரூபத்தை அடையமுடியும்! ஆகவே குழந்தாய்

''சத் சங்கத்வே நிஸ்சங்கத்துவம்
நிஸ் சங்கத்வே நிர்மோகத்வம்
நிர்மோகத்வே நிச்சல தத்வம்
நிச்சல தத்வே ஜீவன் முக்தி!''

என்ற முடிந்த முடிவாக காண்பதையும், கேட்பதையும் எக்கேள்வியும் இன்றி மௌனமாக்கி அனைத்தும் ஒன்றே! அதுசுத்த சிவமே! அது என்றென்றும் நலமே! அது யாமே! அது நீயே என உறுதியுடன் **சகஜானந்த முக்திநிலை** பெறுவாயாக!

17. பங்கற்ற பரப்பிரம்மசொரூபம் ஒன்றே

பரமார்த்த தசையிலுள்ள வஸ்துவேனும்

அங்குற்ற அனந்த வித சக்திக் கெல்லாம்

ஆதாரமாக ஒரு மாயா சக்தி

அங்குற்றது அதனால் அச்சொரூபம் தானே

தயங்கிய இச்சித்தமென விவர்த்தமாகும்!

பொங்குற்ற சித்தமதே அனந்த கோடி

புவனமுதல் பொய் வடிவாய் தோற்றுமன்றே!

(அக்.36; பா.24)

பொருள்:-

குணமற்ற, குற்றமற்ற, குறைவற்ற, சொல்லற்ற, பொருளற்ற, பயமற்ற, பங்கமற்ற, **"நினைவுற்ற"** ஸ்ரீ பரசொரூபம் ஒன்றே எங்கும் எதிலும் உள்ளது! அது பரஸ்வரூபமாக இருந்து தன்னைத் தானே தோற்றுவித்துக் கொண்ட தன்மையினால் அதை ஆதிசக்தி என்றும், பராசக்தி என்றும், மகாசக்தி என்றும் பல பெயரிட்டு அந்த ஒன்றை அழைத்தனர். இதை யோகமாயை, மூலமாயை, சுத்த மாயை என்றும் அழைக்கலாம்! **ஆனால் ஒன்றே!** அண்டபிண்ட பிரம்மாண்டங்களை சிருஷ்டி செய்வோம் என்ற எண்ணம் அதிலிருந்து தோன்றிய தன்மையினால் **இச்சை** (இச்சா) சக்தி என்றும்; தோன்றியதை வைத்து கிரீடிக்க (விளையாட) வேண்டும் என்ற ஓர் எண்ணம் தோன்றிய தன்மையினால் **கிரியை** (கிரியா) சக்தி என்றும்; விளையாட்டில் இன்ப துன்பத்தை **கற்பனா வடிவத்தில்** தோற்றி அனுபவிக்கும் எண்ணம் தோன்றிய தன்மையினால் **ஞானம்** (ஞானா) சக்தி என்றும் தம்மை மூன்று வடிவில் அமைத்துக் கொண்டது! இவை மூன்றும் **சத்வ குணரீதியில்** தம்மை அமைத்துக்

கொண்டு **சிற்சக்திகளாக** சிருஷ்டி ஸ்திதி சம்ஹார லீலா சொரூபமாக உலகை கிரீடித்தன! பின் இவற்றிலிருந்து நாநாவித சக்திகள் பிரிந்து **ரஜோகுண, தமோகுண விருத்தியில்** தேவதைகளாகவும், காவல் தெய்வங்களாகவும் பிரிந்து உலகை கிரீடித்தன. இவைகள் **மலின சக்திகளாகும்!** மலை உச்சியில் பெய்யும் மழை ஜலமானது பூமிக்கு வரும்போது வற்றாத ஜீவ நதி என்றும், சிற்றாறு என்றும், ஓடை என்றும், கால்வாய் என்றும் பற்பல நாம ரூபம் பெறுவது போல காலாதீத அந்த ஸ்ரீ பரசொரூபத்தில் இருந்த தம்மைத்தாமே பிரித்து அண்ட பிண்ட பிரம்மாண்டங்களும், அனைத்து ஜீவ கோடிகளாகவும், அவைகளை பரிபாலிக்கும் தேவ தெய்வங்களாகவும், அனைத்து சக்திகளாகவும் **தாமே ஆனது** என உணர்க! அது நாமே எனவும் உணர்க!

18. பதம் பதமாய் சொல்லியிடும் **நாமமில்லை**

பதார்த்தமென சொல்லியிடும் **உருவமில்லை**

விதம் விதமாய் விளங்கிய **எப்பொருளும் இல்லை**

விரிந்த **ஜக ஜீவ பரம்** எவையும் இல்லை

சுத்தமதாய் ஒருகாலும் **ஒன்றும் இன்றி**

சுதந்திரமாய் உள்ள பரப்பிரம்மம் ஒன்றே!

நிதம் தவிராது அப்பிரம்மம் **நாமே என்று**

நிலை பெற்ற ஞானத்தால் முக்தனாவாய்!

(அத்.27; பா.37)

பொருள்:-

குழந்தைகளே! ஒரு பொருளை பல பாஷைகளில் பற்பல நாமாக்களால் சொல்லி, விவகரித்து, விகாரத்தை அடைந்து, தர்க்க குதர்க்க வாதங்கள் பண்ணி, பேசுவதால் பல நாமங்களை நாமே உண்டாக்கி விடுகிறோம்! அதேபோல் ஒரே தெய்வத்தை நம் இஷ்ட காமியார்த்தமாக பல உருவங்களை கற்பனை பண்ணி அதற்கு நாமாவையும் கொடுத்து, அந்த நாம ரூபங்களை வழிபட்டு ஆராதனை செய்வதற்கு கோடான கோடி நாமங்களையும், மந்திரங்களையும், வழிபடும் ஆராதனை விதிகளையும், நாமே உண்டு பண்ணி அந்த தெய்வங்கள் இருப்பதற்கு கற்பனா ரூபமாக (முடியுமா என்றால் முடியும்) நாமே அந்த ஆத்ம சக்தி, நாமே அந்த ஆத்மா சொரூபமாக இருப்பதால் நமக்கு நாமே ஓர் ஸ்தானத்தை தேர்ந்தெடுப்பது முடியாத காரியமல்ல. அந்த இடங்களாகிய கைலாயம், வைகுண்டம், மணிக்ரீவம், தேவலோகம், பிரம்ம லோகம், சத்யலோகம், சாயுச்யலோகம் (பதவி) என மேலே ஏழும் கீழே ஏழும் (அது நமக்கு தேவை இல்லை) மனோ கற்பனை

மூலமாக உண்டு பண்ணி **பதமுக்தி** என்றும் **பரமுக்தி** என்றும் பத அர்த்தங்களாக பிரித்து பிரித்து வைத்து, இதுவா? அதுவா? இது உயர்ந்ததா? அது உயர்ந்ததா? இங்கு சுகம் கிடைக்குமா? அங்கு சுகம் கிடைக்குமா? என நாமே கேள்வியையும் போட்டு பதிலும் சொல்லி சந்தேகம் விபரீதமாகி, விபரீதம் குழப்பமாகி, இதுவே வாதப் பிரதிவாதங்களாகி ஓர் முடிவு காண முடியாமல் ஓர் முட்டைகுள்ளேயே சுற்றிச் சுற்றி வரும் முட்டாளாக இருக்கிறோம்! இது கற்பனா ரூபத்தால் வந்த கேடு ஆகும்!

பத அர்த்தங்களை பதார்த்தமாக (பண்டம் பதார்த்தமாக) கற்பனை பண்ணிய இந்த ஜீவனானவன் உணவு, உடை, இருப்பிடம் என இந்த மூன்றிலும் சிக்கிய இந்த ஜீவன் உணவினால் நாவுக்கு அடிமையாகி, உடையினால் சரீர அபிமானத்திற்கு அடிமையாகி, இருப்பிடத்தினால் நான் பெரியவன் என்ற அகங்காரத்திற்கு அடிமையாகி பொன், பொரு ள் மோகத்தில் (வஸ்து மோகத்தினால்) கட்டுண்டு, ஜனன மரண சாகரத்தில் சிக்கிக் கொள்கிறான். ஆகையால்!!!

மேலே கூறிய விரிந்த ஜகம் இல்லை! அதை ஆளுகின்ற தெய்வீக கதையும் இல்லை! இந்த இருவருக்கும் இடையில் விளங்கும் பூமியோ, தேவ தெய்வ லோகங்களோ, அங்கங்கு அனுபவிக்கும் போகங்களோ, இந்த போக போக்கியங்களை அனுபவிக்கும் ஜீவனோ, தேவனோ எவனும் இல்லவே இல்லை! இருப்பதெல்லாம் ஒன்றே! அது சுதந்திரமானதே! அது நாமே என உணர்வு பெறுவாயாக! இதை சிறிய உதாரணத்துடன் சொல்லி இதை பூர்த்தி செய்கிறோம்!

1. மலையில் புறப்பட்ட ஸ்ரீ பர சொரூபமான நதியானது பூமியில் பல இடங்களில் பாய்ந்து ஓடும் போது கங்கை,

யமுனை, சரஸ்வதி, பிரம்ம புத்ரா, நர்மதை, காவேரி என தேவ தெய்வ தீர்த்தங்களாக **பேசப்பட்டு** அதில் மூழ்குவோருக்கு பாவங்கள் நிவாரணம் ஆகும் என்றும் (எந்த பாவமோ? யார் செய்ததோ? எப்படி நீங்கியதோ?) கற்பனா சொரூபமாக பேசப்படுகிறது. அது தம் யதார்த்த ஸ்தானமாகிய சமுத்திரத்தில் சென்று கலந்து விட்டால் நீ சொல்லிய புண்ணிய தீர்த்தங்களையும் அந்த தேவ தெய்வங்களையும் பிரித்து பார்க்க முடியுமா? முடியாது. ஆகவே மலையில் தோன்றியது, பூமியில் நடந்தது, சமுத்திரத்தில் கலந்தது இத்தனையும் எண்ணத்தில் தோன்றி, வாக்கினால் பேசி விவகாரத்திற்கு வந்து விகாரப்படுத்தியதே (பிரச்சனையானதே) மிச்சம். ஆகவே விகார விவகாரத்தை விடு, தோற்றம், இருப்பு, மறைவு இந்த மூன்றும் உன் மனோமய கற்பனையே. **இருப்பது ஒன்றே! அது என்றென்றும் நலமே! அது சுக சொரூபமே! அது நாமே!** என முடிப்பாயாக!

2. இதைப் போலவே பல வண்ண பூக்களில் இருக்கும் மதுரமான தேனை தேனீக்கள் கொஞ்சம் கொஞ்சமாக சேகரித்து தம்கூட்டில் தம்குடத்தில் சேர்த்து வைக்கிறது! அந்த தேனை பிரித்து இது இந்த பூவின் தேன், அது இந்த பூவின் தேன் என பிரிக்க முடியுமா? முடியாது! இதைப்போல நேத்திரத்தால் காணக்கூடிய ஓர் உப்புக் கட்டியை ஓர் தண்ணீர் பாத்திரத்தில் போட்டுவிட்டால் அந்த உப்புக் கட்டியை திரும்ப உருவமாக காணவோ எடுக்கவோ முடியுமா? முடியாது!

குழந்தைகளே! சமுத்திரத்தில் கலந்த நதியும், தேன் குடத்தோடு கலந்த பூவின் தேன்களும், பாத்திர ஜலத்தில் கலந்த உப்புக் கட்டியும் எப்படி **தன்மயமானதோ** அதைபோல்தான் சித்சொரூபமான நீங்களும் அக்கினியின் பொறி போலும்,

சமுத்திரத்தின் திவலை போலவும் தனித்து காணப்படுகிறீர்கள்! பேத புத்தியாகிய மனோ எண்ணம் உங்களை ஜீவன் என விகாரப்படுத்தி உலக விவகாரத்திற்கு வந்து விட்டீர்கள்! நீங்கள் ஜீவனும் அல்ல, இந்த லோகமோ, தேவ லோகங்களோ, அங்குள்ள போகங்களும் நீங்களும் அல்ல! உங்களுடையதும் அல்ல! முடிவாக, பிரமாணமாக இறை திருவடியையும் குரு திருவடியையும் தொட்டு கூறுகிறோம்! அனைத்தும் ஒன்றே! அது சுக சொரூபமே! அது சுத்த சிவமே! அது நாமே! அது நீயே! என முடித்துக் கொள்ளுங்கள்.



திருவடியின் மொழிகள் - அவை
ஞான அம்ருத துளிகள்.
அதை கேட்டுணர்ந்து நாமும் நம்மை
தெய்வமாக்குவோம் - அதன்
மயமேயாகுவோம். (திருவடி....)

உலகை காக்கும் இறைவன் - அவன்
உன்னையும் நிச்சயம் காப்பான்.
மனதில் வீணே கற்பனை பண்ணி
மயக்கம் கொள்ளாதே - வீண்
குழப்பம் கொள்ளாதே. (திருவடி....)

உலகை பலவாய் பார்த்தால் - அது
உன்னை அழித்து நிற்கும்.
அனைத்தும் ஒன்றே அது நலமென
பார்க்க பழகிக் கொள் - உலகில்
வாழப் பழகிக் கொள். (திருவடி....)

நீ உலகை அடக்க நினைத்தால்
அது உன்னை அடக்கி நிமிரும் - நீ
அடங்கி வாழ்ந்து வந்தால்
அது உன்னை பணிந்து நிற்கும் - உலகம்
உன்னை வாழ வைக்கும். (திருவடி...)

உன்னை உணர வேண்டின் - உன்
நாவை அடக்கப் பழகு.
நான் எனதை நீக்கி
பேசக் கற்றுக்கொள் - மனதில்
பணியக் கற்றுக்கொள். (திருவடி...)

மனதை மாய்த்து விட்டால் - பின்
மஹத்தே எஞ்சி நிற்கும்.
திருவடியில் சரணடைந்து
எதையும் ஏற்றுக்கொள் - மனதை
மாய்க்கக் கற்றுக்கொள். (திருவடி...)

குழந்தை போன்ற பரத்தை என்றும்
உன்னில் காணப் பழகு.
சிற்ப சித்திர விசித்திரமாக
பார்த்து நடுங்காதே - அதை
தூரத் தள்ளாதே. (திருவடி...)

அனைத்தும் ஒன்றே அது நலமே
அது சிவமே என்றுணர்.
அது யாமே அது நீயே
என்று முடித்துக்கொள் - மனதில்
நிறைவைப் பெற்றுக் கொள். (திருவடி...)

வணங்கிடுவோம் வாரீர்!

வணங்கிடுவோம் எங்கள் சற்குரு நாதரை
பணிவுடன் நாமெல்லாம் கூடி! (வணங்கி...)

திருவடித் தூளியாம் அன்புத் தந்தையின்
பாதத்தில் ஒன்றாய் கூடி!
அவர்மொழி கேட்டு அதன்படி நடந்து
உயர்ந்திடுவோம் என்றும் நாமே! (வணங்கி...)

ஞாயிறுதோறும் எம்மை அழைத்து
நல்லுபதேசம் செய்வார்!
செவிக்குணவுடனே சுவையுடன் கூடிய
அருள் பிரஸாதமும் தருவார்! (வணங்கி...)

எம்மை ஈன்ற அன்னையும் தந்தையும்
கண்கண்ட தெய்வம் என்பார்!
காலையும் மாலையும் அவரடி வணங்கி
சிறப்புடன் வாழ பணிப்பார்! (வணங்கி...)

பொறுமை என்பது வாழ்வில் நமக்கு

மாபெரும் பொக்கிஷம் என்பார்
பொறுமையுடனே அடக்கமும் பழகி
மகிழ்வுடன் வாழ்ந்திட வைப்பார் (வணங்கி...)

உன்னை காத்திட இறைவன் இருக்க
கவலை உனக்கேன் என்பார்!
கவலை கோபம் பயமும் களைந்து
தைரியம் தந்து அருள்வார்! (வணங்கி...)

என்றும் எம்மை காத்திடும் கவசம்
இறை நாமமொன்றே என்பார்!
இறைநாமம் முன்வைத்து நாம் செயல் புரிந்தால்
வெற்றி நமக்கே என்பார்! (வணங்கி...)

ஏட்டுக் கல்வியை படித்து கிழித்து
பயன் என்ன கண்டாய் என்பார்!
இறைவனுடனே நம்மை சேர்த்திடும்
கல்வியை கல்லென பணிப்பார்! (வணங்கி...)

அப்பா உந்தன் திருவடி பணிந்து
வளர்ந்திடும் குழந்தைகள் நாங்கள்!
உந்தன் மடியில் நாங்கள் என்றும்
தவழ்ந்திட நீ எமக்கருள்வாய்!

வணங்கிடுவோம் எங்கள் சற்குரு நாதரை
பணிவுடன் நாமெல்லாம் கூடி!
திருவடித் தூளியாம் அன்புத் தந்தையின்
பாதத்தில் ஒன்றாய் கூடி
அவர்மொழி கேட்டு அதன்படி நடந்து
உயர்ந்திடுவோம் என்றும் நாமே!

குருமொழி கேட்டோம் நாமே!
அதன்வழி நடப்போம் நாமே!
ஆனந்தமாகவே வாழ்வோம்! - நாம்
ஆனந்தமாகவே வாழ்வோம்!